விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 23 வெள்ளிக்கிழமை (05.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 48

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

## அவசர காலச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்க ஜே.வி.பி. தீர்மானம்

(கொழும்பு)

அவசர காலச் சட்டம் நாடாளுமன்றத்தில் நீடிக்கப்படும் விவாதம் இன்று நடைபெறும் போது எதிராக வாக்களிக்கப் போவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது அவசர காலச் சட்டத்தை அரசாங்கம் ஒரு கருவியாக் பயன்படுத்திக் கொண்டது. இதன் காரணமாகவே நாம் அவசர காலச் சட்டத்திற்கு எதிராக எமது வாக்குகளைப் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

அவசர காலச் சட்டம் நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதனை இந்த அரசாங்கம் தேர்தல் நடவடிக்கைக (16 ஆம் பக்கம் பார்க்க)

## கண்டியில் கோலாகலமாக இடம்பெற்ற இலங்கையின் 62-வது சுதந்திர தினம்

(கொழும்பு)

இலங்கையின் 62-வது சுதந்திர தினம் நேற்றுக் கண்டியிலுள்ள செங்கடகல வளாகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி உள்ளிட்ட நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், முப்படைத் தளபதிகள், அரச முக்கிய பிரமுகர்கள், இராஜதந்திரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இராணுவம், கடற்படை , விமானப் படை மற்றும் பொலிஸாரின் அணி வகுப்பு என்பன இடம்பெற்றன. மேல் நாட்டின், கீழ் நாட்டின், சப்ரகமுவ சிங்கள கலாசார நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. (16 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல்வாதிகள் மக்களை தவறாக வழிநடத்தக் கூடாது

## சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த உரை

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி வரலாற்றில் அதிர்ஷ்டமுள்ள ஜனாதிபதி நானே என்பதில் பெருமை கொள்கின்றேன். அரசியல்வாதிகள் மக்களை ஒருபோதும் தவறான பாதையில் வழிநடத்தக் கூடாது. நான் நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கான எந்த முயற்சிகளிலும் ஈடுபடவில்லை. இனியும் அவ்வாறான செயலைச் செய்யமாட்டேன் என நேற்று இடம்பெற்ற சுதந்திர தின வைப்வத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)



## பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக ஜனாதிபதித் தேர்தலை விமர்சிக்காதீர்கள்

### எதிர்க்கட்சிகளிடம் அரசு கோரிக்கை

(கொழும்பு)

மக்களை வீதிக்கு அழைப்பதன் மூலம் அவர்களின் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுப்பதாகவும் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தயார்ப்படுத்தல்களுக்காக எதிர்க்கட்சிகள் ஜனாதிபதித் தேர்தல் முடிபை விமர்சிப்பதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேசத்தின் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் சத்தியாக்கிரகங்கள் நடத்துவதன் மூலம் வாக்குகளைப் பெற முடியாது என்றும் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தல் (16 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தின நிகழ்வில் வேம்படி மாணவிகள்

(கொழும்பு)

கண்டியில் நேற்று நடைபெற்ற 62-வது சுதந்திர தின நிகழ்வில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளும் கலந்து கொண்டனர்.

இலங்கை தேசிய கீதம் பாடும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டதாக சுதந்திர தின நிகழ்வின்போது அறிவிக்கப்பட்டது.

சுதந்திர தின நிகழ்வில் யாழ்.மாவட்ட மாணவிகள் நீண்ட காலத்திற்குப் பின்னர் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மூவின மாணவிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)



கண்டியில் நடைபெற்ற 62-வது சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய கீதத்திற்கு மரியாதை செலுத்துவதையும் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெலிக்கடை சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி இடமாற்றம்

வெலிக்கடை சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி நெவிலி சில்வாவும் மற்றுமொரு அதிகாரி நிசாந்தா சொய்சாவும் அரசினால் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

படையினரை களையெடுக்கும் முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக வெலிக்கடை சிறைச்சாலை பொறுப்பதிகாரி நெவிலி சில்வாவும், உதவி பொலிஸ் சுப்பிரின்டன் நிசாந்தா சொய்சாவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடமாற்றத்திற்கான காரணங்கள் அவர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. எனினும் தேர்தலுக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் அமைப்பாளர் டிரான் அலஸ் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல் தொடர்பாக அரசின் உத்தரவுகள் இன்றி விசாரணைகளை மேற்கொண்டதோடு அங்கு விஜயம் மேற்கொண்ட ஜெனரல் பொன்சேகா, ரணில் விக்கிரமசிங்கா, சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடன் உரையாடியதுமே இவர்களின் இடமாற்றத்திற்கான காரணங்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## ஆங்கில டிப்ளோமா கற்கை நெறி

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. இக் கற்கை நெறியை பயில விரும்புவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் தொழில்சார் ஆங்கில கற்கை நெறியை நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும். அது தவிர்ந்த ஏனைய விண்ணப்பதாரிகள் தெரிவுப் பரீட்சை மூலம் இக் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## பொது மருத்துவச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொது சுகாதாரத் துறையினால் நடத்தப்படும் மருத்துவர்களுக்கான பொது மருத்துவச் சான்றிதழ் (CME/CPD) கற்கை நெறிகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இளமருத்துவ மாணிப்பட்டத்தை (MBBS) நிறைவு செய்திருப்பதுடன் இலங்கை மருத்துவ ஆலோசனைச் சபையில் பதிவு செய்யப்பட்ட மருத்துவராக இருத்தல் வேண்டும். இக்கற்கை நெறி இணையத்தளவழி கற்கை நெறியாகும்.

விண்ணப்பப்படிவங்களை 11.02.2010க்கு முன்பதாக இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாமென இணைப்பாளர் கி.கந்தவேள் அறிவித்துள்ளார். (ச)



கோப்பாய் தெற்கு ஜே/260 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த கிராம அபிவிருத்தி சங்கத்தினால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களிற்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. சங்கத்தின் பொருளாளர் சி.சதீஸ்குமார் கோப்பாய் தெற்கு றோ.க.தமிழ் கலவன் பாடசாலை மாணவருக்கு பாடசாலை உபகரணம் வழங்குவதைப் படத்தில் காணலாம்

## புதிய அஞ்சல் சேவை

இலங்கையின் 62வது சுதந்திர தினத்தை முன்னிட்டு புதிய பொதி அஞ்சல் சேவையொன்று நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அஞ்சல் மா அதிபர் என்.பி.கே.திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்த புதிய சேவையின் மூலம் கொழும்பு நகருக்குள், வெளியேயும் 4மணித்தியாலங்களுக்குப் பொதிகள் பறிமாற்றப்படும். பொதிகளை மிகவும் துரிதமாக பரிமாற்றம் செய்யும் வகையில் இதன் சேவைகள் முன்னெடுக்கப்படும் என்றார். (ச-9)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகக் கூட்டமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறவுள்ளது. (ச-9)

# தாதியர் பயிற்சிநெறி நேர்முகத்தேர்வு
## விண்ணப்பித்த அனைவரும் கலந்து கொள்ள முடியும்!

மாணவ தாதிமார் பயிற்சி நெறிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வுக்கு, அப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் கலந்து கொள்ளமுடியும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

கொழும்பு சுகாதார அமைச்சினால் 23-10-2009ஆம் திகதி வர்த்தமானியில் வெளியான தாதிமார் பயிற்சி நெறிக்கான ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தகைமைகளை பரிசீலிப்பதற்கான நேர்முகப் பரீட்சை இன்றும், நாளையும் காலை 9மணி தொடக்கம் 2மணி வரை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும். இந்நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோரின் விபரங்கள் நேற்றைய வலம்புரியில் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்து நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோரை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் முறையிட்டதையடுத்து அவர் சுகாதார அமைச்சிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாதோரும் தேர்வில் கலந்து கொள்ள சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் தாம் விண்ணப்பித்தமைக்கான ஆதாரத்துடனும், பதிவுத்தபால் பற்றுச்சீட்டு, நேர் முகத் தேர்வுக்குரிய ஆவணங்களுடனும் இன்றும் நாளையும் சமுகமளிக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். (ச)

# மரண அறிவித்தல்

திருமதி

## உதயராணி கோபாலகிருஷ்ணன்

(முகாமைத்துவ உதவியாளர், யாழ். மாநகர சபை)



இரத்தினம் கோபாலகிருஷ்ணன் (ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர்) அவர்களின் மனைவி திருமதி உதயராணி கோபாலகிருஷ்ணன் (முகாமைத்துவ உதவியாளர், யாழ். மாநகர சபை) 04.02.2010 வியாழக்கிழமை காலமானார். இவர் ஸ்ரீபிரியா (இந்தியா), ஸ்ரீரஞ்சன் (பொறியியல் மாணவன், அண்ணா பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்) ஆகியோரின் அன்புத்தாயாரும் கா.மங்களேஸ்வரன் (வடிவமைப்பாளர், ஆனந்த விகடன் மீடியா, சென்னை) அவர்களின் மாமியாரும் செ.மெற்றாஸ் மயில் (நிர்வாக உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலகம் கிளிநொச்சி), இராஜேஸ்வரியம்பாள் (புதுக்குடியிருப்பு), சறோஜினிதேவி (பண்டத்தரிப்பு), உதயகுமாரசிங்கம் (புதுக்குடியிருப்பு), இன்பவதி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இ.ரவீந்திரன், இரஞ்சிதமலர், அமரர் கந்தையா, செல்வரத்தினம், விஜயரத்தினம், மனோன்மணி, ஆ.நற்குணராசா (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), மகாதேவி (ஆசிரியர்), ந.நந்தினி (முகாமைத்துவ உதவியாளர்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.02.2010 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று செம்மணி இந்துமயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும்.

இத்தகவலை அன்பர்கள், உறவினர்கள், சக உத்தியோகத்தர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

18, மூத்தவிநாயகர் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
நல்லூர்.
021-2223586

தகவல்:-
கணவன் -இ.கோபாலகிருஷ்ணன்
(ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர்)
சகோதரன்- கலாபூசணம்
செ.மெற்றாஸ் மயில்
(நிர்வாக உத்தியோகத்தர் கிளிநொச்சி, வலயக் கல்வி அலுவலகம்)

(569)

யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்
வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி-2010
காலம்:- 2010.02.06 சனிக்கிழமை பி.ப. 1.00 மணி
இடம்:- பாடசாலை மைதானம்.
தலைமை:- திரு.ந.குணரத்தினம் (அதிபர்)
பிரதம விருந்தினர்
திரு.சில்வேஸ்திரி அலஸ்ரின் (உதயன்) J.P அவர்கள்
(இணைப்பாளர் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி)
திருமதி சில்வேஸ்திரி அலஸ்ரின் அவர்கள்
சிறப்பு விருந்தினர்
திரு.செ.நவரத்தினம் J.P அவர்கள்
(விவசாய சம்மேளனம் தலைவர் குப்பிளான்)
திரு.துரை தவராஜா J.P
(முன்னாள் உப தலைவர் நல்லூர் பிரதேச சபை)
திரு.சி.தெட்சிணாமூர்த்தி
(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ குப்பிளான் விக்கினேஸ்வரா ம.வி.
(571)

யாழ். மக்கள் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
வலம்புரியின்
திருமண தரிசனம்
உங்கள் வலம்புரியில் ஞாயிறு தோறும் வெளிவரும்.
எங்கள் உறவுகளின் வெளிநாட்டு தொடர்புக்காக இணையத்தளத்திலும் திருமண தரிசனம் வெளிவரும்.
அன்பார்ந்த பெற்றோர்களே! உங்கள் பொறுப்பை இலகுவாக்க வலம்புரியின் சேவையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்பு:
நேரில்
இல. 3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தேவை
பான்ஸி பொருட்கள் விற்பனையில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை.
நேரில் வரவும்.
மது பான்ஸ் ஹவுஸ்
யாழ். வீதி,
[illegible]
(C-4386)

சந்திரகாந்தன் திருமண சேவை
அரச பதிவு: VW/FIN/R/I/12/2009
திருப்தியாகவும் துரிதமாகவும் செயல்படும் ஸ்தாபனம்
அலுவலக நேரம்: 800-2.00
T.P.:0775081756
தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.,
சிவன்கோவிலடி, சித்தன்கேணி.
S.ஆனந்தி இயக்குனர்
(C-4388)

விற்பனைக்கு
ஜேனி இசுசு மினிபஸ் Model No. M உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:
T.P.: 0778095712
(072)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அவசரம் தேவையா?

ஓர் ஊரில் இரண்டு துறவிகள் இருந்தார்களாம். அதில் ஒருவர் வயதானவர். இன்னொருவர் இளம் துறவி.

அவர்களிருவரும் ஒருநாள் நரேத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

குறுக்கே ஓர் ஆறு இருந்தது. அதைக் கடந்து தான் அந்தப் பக்கம் போக வேண்டும்.

அதற்குப் பின் கொஞ்சத்தூரம் நடக்க வேண்டும்.

ஆற்றைக் கடப்பதற்கு படகு இருந்தது. அதில் ஏறி உட்கார்ந்தார்கள்.

"ஐயா... நீங்கள் இரண்டு பேரும் எங்கே போகிறீர்கள்?" என்று படகோட்டி கேட்டன்.

"இந்தப் பள்ளத்தாக்குக்கு அந்தப் பக்கம் இருக்கும் நகரத்துக்குப் போக வேண்டும் "என்றனர்.

"அப்படியானால் நீங்கள் கொஞ்சம் மெதுவாக போவதுதான் நல்லது" என்றார்.

இதற்கு அந்தப் பெரிய துறவி சொன்னார்.

"நீ சொல்வது சரியாகாது. நீ சொல்வது போல் நாங்கள் மெதுவாகப் போனால் போய்ச்சேர வேண்டிய இடத்தை அடைய முடியாது"

"ஏன்?"

"ஏனெனில் அங்கே ஒரு நடைமுறை உண்டு. சூரியன் மறைவதற்குள் போனால் தான் அந்த நகரத்துக்குள் போக முடியும். இல்லையெனில் போக முடியாது. அதன் பின் அந்த நகரத்தின் வாசல்களை அடைத்து விடுவார்கள். விடியும் வரைக்கும் வெளியே காத்திருக்க வேண்டும். அது ஆபத்தானது. அதனால் நாங்கள் வேகமாகப் போவது தான் நல்லது.

இப்பொழுது அந்தப் படகோட்டி சொன்னான்

"ஐயா... நீங்கள் சொல்வது சரிதான். இருந்தாலும் என்னுடைய அனுபவம் என்னவென்றால்... யார் மெதுவாகப் போகிறார்களோ அவர்கள் தான் போய்ச்சேர வேண்டிய இடத்தை அடையமுடியும்"

மற்றைய துறவி இதைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் சொன்னார்.

" இந்தப் படகோட்டிக்குக்கு இந்த விடயத்தில் நம்மை விட அவனுக்கு அனுபவம் அதிகம். அதனால் அவன் சொல்லும் யோசனைப்படி நடப்பது தான் நல்லது" என்றார்.

பெரிய துறவி அதை ஏற்றுக் கொள்ளவில்லை. படகு அடுத்த கரையை அடைந்தது.

பெரிய துறவி படகை விட்டு இறங்கியதும் வேகமாக அந்த நகரத்தை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

கடைசியில் என்ன நடந்தது தெரியுமா? இளம் துறவி சரியான நேரத்துக்குள் அங்கு போய்ச் சேர்ந்து விட்டார்.

பெரிய துறவி வாசலுக்கு வெளியே வந்து கிடந்தார்.

உடம்பெல்லாம் காயம்.

படகோட்டி அங்கே வந்தான்.

பெரியவரைப் பார்த்து "என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"நீ சொன்னபடிதான் ஆச்சு" என்றார்.

அந்தப் பாதை கரடு முரடானது. மேடும் பள்ளமும் அதிகம் கல்லும் முள்ளும் அதிகம்.

பெரியவர் வேகமாக ஓடியதால் பல இடங்களில் தடுமாறிக் கீழே விழுந்தார்.

அவர் முதுகில் நிறைய வேத நூல்கள் எல்லாம் சுமந்து கொண்டு போனார். அவையெல்லாம் கீழே விழுந்தது. அவற்றையெல்லாம் எடுத்துக் கட்டி முதுகில் வைத்துக் கொண்டு போவதற்குள் நேரமாகிவிட்டது. படகோட்டி சொன்னான்.

"ஐயா! எப்பொழுதும் இப்படித்தான் ஆகும்." என்று சொல்லி விட்டு அவன் போய் விட்டான். இது ஒரு ஸென் கதையாம். கதை சாதாரணமாகத்தான் தெரிகிறது.

ஆனாலும் அது சொல்ல வரும் கருத்து என்ன தெரியுமா? வாழ்க்கை என்ற பாதையில் நிதானமாகப் பயணம் செய்யுங்கள். ஏனென்றால் நீங்கள் அடைய வேண்டிய இடம் என்று அங்கே எதுவும் இல்லை.

அந்த இடம் உங்களுக்குள்ளே இருக்கிறது.

நீங்கள் அவசரப்படாமல் இருக்கும்போது தான் அந்த இடத்தை நீங்கள் உணர முடியும் நீங்கள் அவசரப்பட்டால் அந்த இடத்தை உணர முடியாது.

இந்தக் கதையை மேம்போக்காகப் பார்க்கும் போது எல்லா விடயத்திலும் நிதானத்தைக் கடைப்பிடித்தால் இந்த உலகத்தில் வாழ முடியுமா?

"நேரம் மிக முக்கியமில்லையா?" என்று கேட்கத் தோன்றும்.

இந்தக் கதையின் அறிவுரை வெளிப்புற உலகத்துக்காக அல்ல. உள்ளேயிருக்கும் உலகத்துக்காக உள்முகப்பயணம் போகிறவர்களுக்கு அவசரம் கூடாது அவ்வளவு தான்.

இன்றைய புற உலக வாழ்க்கைக்கு நேரம் மிக முக்கியமாகிவிட்டது. எதையும் சீக்கிரம் முடிக்க வேண்டியிருக்கிறது.

ஒரு பேச்சாளர் இருந்தார். அவரிடம் ஒரு பழக்கம்.

அரைமணி நேரம் தான் பேசுவார். அவ்வளவு தான். அதற்காக ஒரு தொழிநுட்பம் வைத்திருந்தார்.

பேச ஆரம்பிக்கும் போது ஒரு இருமல் மாத்திரையை வாயில் போட்டுக் கொள்வார். அது அரை மணி நேர்த்தில் கரைந்து விடும். அதுதான் அடையாளம். அத்துடன் பேச்சை முடித்துக் கொள்வார்.

ஒரு தடவை பேச ஆரம்பிக்கும் போது கோட்டுப்பையில் கையை விட்டு எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்.

பேச ஆரம்பித்தவர் இரண்டு மணி நேரமாக நிறுத்தவில்லை. அவருக்கே சந்தேகம் வந்தது. ஒரு கட்டத்தில் வாயிலிருந்த இருமல் மாத்திரையை எடுத்துப் பார்த்தார். அப்பொழுதுதான் புரிந்தது.

அது இருமல் மாத்திரை இல்லை. அவருடைய கோட்டுப் பொத்தான் என்பது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ். மாவட்ட வாக்காளர் பட்டியலில் குழப்பநிலை

## தேர்தல் ஆணையாளர் விளக்கம்

யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர் பட்டியலில் பதிவாகியுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அங்கு வாக்காளர்கள் வதிவிடமாக இல்லை என தேர்தல் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

யாழ். மாவட்ட வாக்காளர் பட்டியலில் 7 இலட்சத்து 20 ஆயிரம் வாக்காளர்கள் பதிவாகியுள்ள போதிலும் அங்கு அதனை விடக் குறைவான எண்ணிக்கையிலேயே வாக்காளர்கள் தற்போது வசித்து வருகின்றனர். பெரும்பாலானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இன்னும் பலர் இந்தியாவில் தங்கி வருகின்றனர். இதேவேளை பலர் வெளிநாடுகளில் உள்ளனர். சிலர் அங்கு குடியுரிமையும் பெற்றுள்ளனர். இது போன்ற காரணங்களால் எண்ணிக்கை குறைந்துள்ளது.

எனினும் பட்டியலில் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதற்கு தேர்தல் செயலகமோ வேறு எவருமோ காரணமில்லை. 1978 இல் பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றின் காரணமாகவே இந்தப்பட்டியல் பேணப்படுகின்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பாராளுமன்றம் ஊடாக முடிவு எடுக்கப்பட வேண்டும் அல்லது வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பு நடத்தி சரி செய்ய வேண்டும். எவ்வாறாயினும் 2010 இல் இதற்கு தீர்வு காணப்படுமென அவர் குறிப்பிட்டார்

தேர்தல் முடிபுகள் வாக்குகள் எண்ணும் நிலையங்களில் ஆறு பிரதிகள் எடுக்கப்பட்டு அதில் ஒன்று வெற்றி பெற்றவருக்கும் இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெற்றவர்களுக்கு ஒரு பிரதி வீதமும் எண்ணும் மண்டபத்தில் ஒன்றும் பெறுபேறு வெளியிடும் இடத்துக்கு ஒன்றும் எண்ணும் நிலையப் பொறுப்பதிகாரிக்கு ஒன்றும் என வழங்கப்படுகிறது.

இதன் மூலம் மோசடி இடம்பெற்றுள்ளதா என்பதனை பரீசீலனை செய்து கொள்ளலாம். கணனிமயமாக்குவதில் மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கூற்றில் எவ்வித உண்மையும் இல்லை.

கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பிரிவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. நீண்டகாலமாக இந்தப் பணியை மேற்கொண்டு வரும் அவர்கள் தேர்தல் முடிபுகளை நேர்த்தியான முறையிலும் நீதியாகவும் செய்தார்கள் என்பதை பூரண நம்பிக்கையுடன் உறுதி யாகக் கூற முடியும் எனவும் இதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை எனவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (6)

# யாழ்.கல்வி வலய அதிபர்களுக்கான

## — அவசர கலந்துரையாடல் —

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கல்விசாரா ஊழியர் தொடர்பான விபரங்கள், கணனி பயிற்சிபெற்ற ஆசிரியர் விபரங்களும் கணனிதாரிகள் விபரங்களும், அரசபாடசாலைகள் தொடர்பான அத்தியாவசிய தகவல்களை திரட்டல் மற்றும் இடம்பெயர்ந்த மாணவர், ஆசிரியர் விபரம், பௌதிக வளங்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்காத பாடசாலைகள் அவற்றைக் கொண்டு வரும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதன்போது பாடசாலை சுற்றாடலை துப்புரவு செய்வதற்கான உபகரணங்கள் சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (6-30)

# — அதிபர் சேவை தரம்-2-II இற்கான —

## நேர்முகப் பரீட்சைக்கு தோற்றவுள்ளோருக்கு

(அல்வாய்)

கல்வி அமைச்சினால் இலங்கை அதிபர் சேவை தரம் 2-II இற்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உரிய சான்றிதழ்களை சமர்ப்பிக்காமையால் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாத 492 தரம்- 2 - II அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை மீண்டும் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்திற்குரிய கடிதங்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனவும் ஏற்கனவே நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியவர்கள் சகல ஆவணங்களையும் போட்டோ பிரதி செய்து தத்தம் வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் இஸ்லாமிய தொழிற்சங்கவாதியான ஜனாப் அன்பு ஜவஷர்ஷா அறிவித்துள்ளார்.

மேலும் வெள்ளிக்கிழமை நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கத் தவறினால் திங்கட்கிழமை செல்லலாம் எனவும் மேலதிக விபரங்களை கல்வி அமைச்சின் அதிபர் பிரிவில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-19)

# இராசி பலன்

*05-02-2010*
*(தை 23 , வெள்ளிக்கிழமை )*
*சப்தமி பின்னிரவு 12.06 மணிவரை*
*சுவாதி பின்னிரவு 5.44 மணிவரை*
*இராகுகாலம் 11.05-12.35 மணிவரை*
*சுபநேரம் 6.35-8.05 மணிவரை*
*துன்னாலை கோயிற்கடவைப் பிள்ளையார் கொடியேற்றம் .*

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், தெய்வதரிசனம், பாராட்டு, குடும்ப மகிழ்ச்சி. |
| இடபம் | செய்தொழில் முன்னேற்றம் , சத்துரு ஜெயம் ,தெய்வசிந்தை , பண வருவாய். |
| மிதுனம் | வியாபார விருத்தி , கௌரவக் குறைவு ,காரிய இடையூறு ,பணக் குறைவு. |
| கடகம் | கல்வியில் ஆர்வம் ,ரோக நிலை , நல்ல முயற்சி ,சுபசெலவு. |
| சிங்கம் | இனிய சம்பவம் , தெய்வ தரிசனம் ,வாக்கு மேன்மை ,பிரயாண நன்மை. |
| கன்னி | மாதர் நட்பு , அதிக செலவு , எடுத்த காரியம் தாமதமாகும் , ஆரோக்கியக்குறைவு. |
| துலாம் | நண்பர்கள் உதவி , தெய்வ தரிசனம் , தொழிலில் ஆர்வம் , சயனசுகம். |
| விருச்சிகம் | தந்தைவழி உறவு , கோபமான நிலை , தொழில் நன்மை , தன விரயம். |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும் , உறவினர் சந்திப்பு , தெய்வ தரிசனம் , மனமகிழ்ச்சி |
| மகரம் | சுபநிகழ்வு , உற்சாகம் , அதிகாரம் ,தொழில் விருத்தி. |
| கும்பம் | அச்சமான நிலை, புதிய திட்டமிடல் , பிரயாண நன்மை , அஜீரணக் கோளாறு. |
| மீனம் | வீண் தொல்லை , உடல் நலக் குறைவு ,முயற்சி தாமதம் ,போசனசுகம். |

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 100 |
| தக்காளி | 130 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 30 |
| கோவா | 80 | 100 | 90 |
| கரட் | 120 | 140 | 120 |
| பூசணி | 35 | 50 | 35 |
| புடோல் | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 140 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 90 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 140 | 150 | 130 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 90 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | -- | -- | 90 |
| கத்தரி தம்புள்ள | 40 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 15 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 | 30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கையின் சுதந்திரதின நிகழ்வுகள்

## கண்டியில்...











## அரச செயலகத்தில்...



## யாழ். மக்கள் வங்கி...



இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு மக்கள்வங்கியின் ஸ்ரான்லி வீதி கிளையில் தேசியக்கொடி ஏற்றப்படுவதையும் யாழ். போதனா வைத்தியசாலையில் பற்சிகிச்சைப்பிரிவை திருத்தி அமைப்பதற்கு ரூபாய் 5 இலட்சம் பெறுமதியான காசோலையை மக்கள்வங்கியின் வடபிராந்திய உதவி பொது முகாமையாளர் கே.ஆனந்தராசா கையளிப்பதையும் அந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் பொருளாதாரத்தில் இந்தியாவின் தலையீடு

10

இப்போது, எமது நாட்டிலிருக்கும் உலோக கனிம வளத்தை அகழ்வாராய்ச்சி செய்யும் உரிமை இந்தியாவுக்கு வழங்கப்படவிருக்கிறது. இதனை நாம் பொருளாதார கண்ணோட்டத்திலேயே நோக்கவேண்டும். என்றாவது ஒருநாள் இந்த நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய அரசாங்கமொன்று உருவாகும் பட்சத்தில், அதற்கான வளங்கள் நாட்டில் இருக்கவேண்டும்.



இந்த அரசாங்கங்கள் நாட்டைக் கட்டியெழுப்புவதில் கரிசனை கொள்வதில்லை. நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங்கமொன்று நிச்சயமாக உருவாகும்.

எமது வளங்கள் மண்ணுக்கடியிலேயே இருக்கட்டும். அழுகிவிடாது. நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங்க மொன்று உருவாகும்போது, இந்த வளங்களை அகழ்ந்தெடுத்து நாட்டை வளப்படுத்த முடியும். அதற்கு முன்னர் இவற்றைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டால் நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தினால் நாட்டை எப்படி வளப்படுத்த முடியும்.

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதை காரணம் காட்டி இந்த அநியாயத்தை மூடிமறைக்கமுடியாது. தேசப்பற்றைப் போன்று நூற்றுக்கணக்கான தேசத்துரோகங்களும் இங்கு நிறைந்திருக்கின்றன.

கிளிநொச்சியைக் கைப்பற்றும் போராட்டத்தினூடாக மஹிந்த ராஜபக்ஷ தன்னை தேசாபிமானியாக காட்டிக்கொள்வதோடு, அதை விட பாரதூரமான துரோகச் செயல்களிலும் ஈடுபடுகின்றார். எவராவது எமதுநாட்டு வளங்களை, எமது நாட்டை வளப்படுத்தும் வளங்களைப் பாதுகாக்காமல், இரண்டு துட்டுக்கு அவற்றை விற்பதாயிருந்தால், அதனை நாட்டுக்குச் செய்யும் துரோகமாகவே நாம் கருதுகிறோம்.

அந்நியரின் ஒப்பந்தங்களுக்கு அடிபணிந்து அவ்வாறு செய்வதை துரோகமாகவே நாம் கருதுகிறோம். வடக்கில் பெறப்படும் வெற்றிகளைக் கொண்டு மறைக்கப்படும் இந்தத் துரோகச் செயல்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவது எமது கடமை. இவை மக்களுக்குத் தெரியவேண்டும்.

வடக்கில் யுத்தத்துக்கு உதவுவதைப் போன்று, பிரபாகரனை தோற்கடித்து மீட்கப்படும் தாய் மண் இங்கு இருக்க வேண்டும். இந்த மண் எமது உரிமை. மண்ணுக்கடியில் மறைந்திருக்கும் வளங்கள் எமதுரிமை. கடல் வளம் எமதுரிமை. அதனைப் பேணிப் பாதுகாப்பதும் தேசப்பற்றுதான்.

தேசப்பற்றென்பது புலிகளைத் தோற்கடிப்பது மாத்திரமல்ல – இந்த மண்ணில் புதைந்திருக்கும் வளங்களை வருங்கால சமுதாயத்துக்காக பாதுகாப்பதும் தேசப்பற்றுதான். தற்போதைய அரசாங்கம் தனது வயிற்றுப் பிழைப்புக்காக இவற்றை விலை பேசுகிறது.


அடுத்ததாக எண்ணெய் அகழ்வு எமது நன்மைக்காகவோ, தீமைக்காகவோ இங்கு எண்ணெய் வளம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணெய் வளத்தை அகழ்வு செய்து எடுக்க வேண்டும். எம்மால் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதென்பது எமக்குத் தெரியும். இதற்கான தொழில்நுட்பங்கள் எமது நாட்டில் இல்லை. கருவிகள் இல்லை.

எமது மன்னார் பிரதேசத்தில் மண்ணுக்கடியில் இருக்கும் எண்ணெயை அகழ்வு செய்யமுடியாது. எனவே, எண்ணெய் அகழ்வில் அனுபவமுள்ள நிபுணத்துவம் பெற்ற, திறமையான கருவிகளையுடைய, ஆற்றலுள்ள ஒரு நாட்டிடம் ஒப்படைக்க வேண்டும். எமக்கு இலாபம் கிடைக்கக் கூடியவாறு செயற்படக் கூடிய நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

**இலங்கையில் இந்தியாவின் தலையீடு தொடர்பில் கண்டியில் இடம்பெற்ற பகிரங்க உரையில் டில்வின் சில்வாவினால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் கருத்துக்கள் தொடராக பிரசுரமாகின்றது.**

இதற்காக, அனைத்து நாடுகளிலிருந்தும் விலை மனுகோர வேண்டும் (டெண்டர்) “ இதோ எமது நாட்டில் எண்ணெய் இருக்கிறது அகழ்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் உங்களது நிபந்தனைகளைத் தெரிவியுங்கள்” என்று அழைப்பு விடுக்க வேண்டும். பின்னர் எமக்கு இலாபம் தரக்கூடிய விலை மனுவை சமர்ப்பித்திருக்கும் நாட்டுக்கும் அதனை ஒப்படைக்க வேண்டும்.


ஆனால் தற்போது என்ன நடந்திருக்கிறது? எவ்வித விலை மனு கோரலும் இல்லாமல் தன்னிச்சையாக, இந்த எண்ணெய் வளங்கள் நிறைந்த மண்ணில் எண்ணெய் வளம் கொண்ட நிலப் பகுதியை இந்தியாவுக்குக் கொடுத்துள்ளனர். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் பவுஸி இலங்கை சார்பிலும், இந்தியாவின் சார்பில் இந்தியாவின்



“கெயான்” நிறுவனமும் ஜூலை 7ஆம் திகதி இதில் ஒப்பமிட்டுள்ளனர். நாம் ஏற்கனவே கூறியதைப் போன்ற இந்தியாவிலிருந்து வந்த மூன்று உயரதிகாரிகளும் இங்கு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்திலேயே இந்த ஒப்பந்தம் டெண்டர் விதிகளையும் மீறி ஒப்பமிடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் எமக்கு நட்டத்தையே பெற்றுத் தரப்போகிறது. அகழ்ந் தெடுக்கப்படும் எண்ணெயில் எமக்குக் கிடைப்பது 10%. மீதி 90% இந்தியா எடுத்துச் சென்று விடும். இதைத் தவிர ரூபா 50 மில்லியன் டொலர் உற்பத்திக் கொடுப்பனவும், இலாபத்தின் மீதான 15% வரியும்இலங்கைக்கு கிடைக்கிறது. இது போதுமானதல்ல. இன்னொரு விதத்திலும் இது எமக்கு நட்டத்தை ஏற்படுத்துகிறது.

உதாரணமாக 7 எண்ணெய் கிணறுகள் இருப்பதாக வைத்துக்கொண்டால், எண்ணெய் அகழ்வுக்காக 7ஐயும் ஒன்றாகக் கொடுக்கவேண்டும். ஒன்றை மாத்திரம் கொடுத்து, அது அகழ்வு செய்யப்பட்டு, எண்ணெய் குறைவாக இருந்தால், அல்லது மேலும் ஆழமாகத்தோண்டப்பட்டு ஆகக் குறைந்தளவு எண்ணெய் தான் கிடைக்குமென்றால், ஏனைய எண்ணெய் நிலங்களை எவருமே வாங்கமாட்டார்கள். எனவே, அவற்றை மொத்தமாக ஒரே நிறுவனத்துக்கோ, நிறுவனங்களுக்கோ




இந்திய - இலங்கை மின்சார கேபிள்

கொடுத்திருக்க வேண்டும். தமது குறுகிய நோக்கத்துக்காக இந்தியாவிடம் மண்டியிட்டு ஓர் எண்ணெய்க் கிணற்றை இந்தியாவுக்கு இலவசமாகக் கொடுத்து விட்டார்கள். இப்போது எமக்குரிய எண்ணெய் வளம் எமக்கு சொந்தமில்லை.

இப்போது சிந்தித்துப் பாருங்கள். கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் 675 ச.கி.மீ. நிலப்பரப்பு இந்தியாவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. கிழக்குக் கடற்கரை பிரதேசத்தில் கனிம வளம் இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. காந்தி வீதி அமைக்கப்படுகிறது. மன்னார் கடற் பிராந்தியத்தில் எண்ணெய் அகழ்வும் இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வடக்கு கிழக்கு மகாணங்களிலுள்ள வளங்களின் உரிமை, அகழ்வு செய்யும் உரிமை அனைத்தும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது ஒரு தவறான அணுகுமுறை, இது இத்தோடு நிறுத்தப்படவில்லை. மேலும் தொடர்கிறது. இந்தியாவிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஒப்பந்தமொன்று செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் சென்னையிலிருந்து தனுஷ்கோடி வரையும் அங்கிருந்து தலைமன்னார்வரையிலும் கடலுக்கடியிலான



மின்சார கேபிள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 200 கி.மீ. வரைகேபிள் அமைத்து அங்கிருந்து அனுராதபுரம், வவுனியா போன்ற பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது, இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இதற்கான செலவு 450 டொலர் மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மின்சார கேபிள் ஊடாக 1000 மெகா வோல்ட் மின்சாரம் இலங்கைக்கு கொண்டு வரப்படவிருக்கிறது. 1000 மெகாவோட் மின்சாரம் என்பது தற்போது நாம் பயன்படுத்தும் மின்சாரத்தில் 40%. இதற்கிடையில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது.

சம்பூரில் இந்தியா அமைத்துக் கொண்டிருக்கும் நிலக்கரி மின் நிலையத்திலிருந்து 2012 ஆம் ஆண்டில் மின்சாரம் 500 மெகாவோட். இப்போது கணக்குக் கூட்டிப் பாருங்கள். இந்தியா எமக்குத் தரும்.

1000 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அவ்வாறாயின் 1500 மெகாவோட் என்பது நாம் பயன்படுத்தும் மின்சாரத்தில் 50% க்கும் அதிகம். இதனை இந்தியாவிலிருந்து நாம் பெற்றாக வேண்டும்.

**டில்வின் சில்வா**
பொதுச்செயலாளர், மக்கள் விடுதலை முன்னணி

மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் இந்தநேரத்தில் இது நல்லதாகத் தான் தெரியும். இது ஒரு கூடாத விடயம். ஏனெனில் எண்ணெய் வளம் மற்றும் மின்சாரமென்பது தேசிய பாதுகாப்போடு தொடர்புடையது. இந்த வளங்கள் தான் உலகப் பாதுகாப்புக்கு பிரதான சாதனம். நாட்டின் பலம் மின்வலுவின் மீதே தங்கியுள்ளது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசிவராத்திரி எப்போது? ஐயந்தெளிவு பெறுவோம்

(நேற்றைய தொடர்ச்சி...)



இ ராத்திரியில் தை, மாசி இரண்டு மாத சம்பந்தத்தை உடையதான சிவராத்திரியானது தை மாத கடைசி திகதி ராத்திரியில் மாசி மாதப் பிறப்பு வருமாகில் அப்பொழுது ராத்திரியின் பாகத்தில் தை மாத சம்பந்தத்தினால் அந்த சிவராத்திரியானது மத்தியம சிவராத்திரி ஆகும். (இவ்விடத்தில் பூர்வகாரணத்தில் வரும் *ரவளகும்பங்கதே பூர்வகராந்தே ரபூஜயெத்!* என்பது பொருத்தமாகின்றது. இதற்கு உதாரணம் பிரமோதுத வருடம் தை மாதம் 30ஆம் திகதி (12-02-1991) செவ்வாய்க் கிழமை திரயோதசி திதி 37.16 கும்பரவி (54.28) அதாவது மாசி மாதப் பிறப்பு மறுநாள் அதிகாலை 4.00 மணிக்கு மாசி மாதம் பிறந்துவிடுவதால் நான்காவது யாமத்தின் கடைசிப் பகுதி மாசி மாதம் சம்பந்தம் உடையதாகிறது.

13-02-1991-மாசி மாதம் 1ஆம் திகதி சதுர்த்தசி 40.31 - இரவு 10 மணிக்கு மேல் அமாவாசை வருவதால் மகாநிசிக்கு முன்னமையே அமாவாசை சேர்வதால் குகூ தோசத்தினால் விரதம் அனுஷ்டிக்க முடியாது.

மாசி மாதம் 30ஆம் திகதி 14.03.1991 வியாழக்கிழமை திரயோதசி 19.29 இருப்பினும் மீனரவி 42.52 - இரவு (11.12 மணிக்கு) பங்குனி மாதம் பிறந்து விடுவதால் நான்காவது யாமத்தில் மாசி மாத சம்பந்தம் இல்லாத காரணத்தால் மாசி மாதம் சம்பந்தம் உடைய, தை - மாசி சம்பந்தமான சிவராத்திரி அனுஷ்டிக்கப்பட்டது. (மாசி மாத கிருஷ்ணபட்ச சதுர்த்தி இல்லாத நிலையில்)

ஈ) ராத்திரி முழுவதும் பங்குனி மாதத்தில் இருக்கிற சிவராத்திரி ஆனது பகலில் வருகிற பங்குனி மாத சங்கிராந்தியினால் ஆகும். அந்த தினம் முதல் பங்குனி மாதம் அப்பொழுது பங்குனி மாத சம்பந்தம் மாத்திரத்தால் அந்த சிவராத்திரி அதம சிவராத்திரி.

ராத்திரி முழுவதும், தை மாதத்தை அடைந்த சிவராத்திரியானது. அது பாவத்தைக் கொடுக்கக்கூடியது. விதிக்கப்பட்ட காலத்தைச் சேராததால் தள்ளத்தக்கது. ஏனென்றால் சந்தியா என்பது முதலான வாக்கியத்தினால் சந்தியா காலத்தில் சந்தியா வந்தனாதி கர்மத்தைப் போல மாசி மாதத்தில் சிவராத்திரி பூசை பூதம்வதிஷயே... போவதிஷ்யே என்ற சுருதியினாலும், பூதம் தபஸ் என்று சொல்லப்படவே, (தபோமாஸஏவ விஹிதம்) மாசி மாதத்திலேதானே விதிக்கப்படுகிறது.

கேவலம் தை மாதத்தையடைந்த சதுர்த்தசியானது விதிக்கப்படாமலிருப்பதினாலே சந்திரகிரஹணத்தைத் தவிர இதரமான ராத்திரியில் பிதிர்தர்ப்பணம் எப்படியோ அப்படிப் பாவத்தைக் கொடுக்கிறதாய்த் தள்ளக்கத்தது என்பதாம். இதற்கு உதாரணம் தாரண வருடம், தை மாதம், 29ஆம் திகதி (11-02-1945), ஞாயிற்றுக்கிழமை, சதுர்த்தசி 49.51. மறுநாள் 12.02.1945, திங்கட்கிழமை, கும்பரவி 0.31 (காலை 6.15க்கு) மாதப் பிறப்பு. ஆகவே 12-03-1945 மாசி மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமை திரயோதசி 19.13 அன்றே சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

சைவர்களுக்குச் சௌரமாதம், சாந்திர மாதம் இரண்டும் உடன்பாடேயாம். எந்தக் கர்மாவுக்கு எந்த மாதம் சொல்லப் பட்டதோ எது அநுட்டானத்திலிருந்து வந்ததோ அந்த விதமே நடத்த வேண்டும்.

**2010ஆம் ஆண்டின் மகாசிவராத்திரி எப்போது என்ற குழப்பத்தைத் தவிர்க்க *மெய்கண்டார்* என்ற நூலில் எழுதப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

சிவராத்திரியை சௌரமாதத்திலேயே அனுஷ்டிக்க வேண்டும் என்பதே ஆகம சம்மதம். சூரியன் கும்பராசியில் வரும் மாசி மாதக் கிருஷ்ண சதுர்த்தசி சிவராத்திரியாகும். உத்தரகாரணாகமம் சிவராத்திரி விதிப்படலத்தில் சௌரமாத மாசியில் வரும் சாந்திரமான பால்குண கிருஷ்ணசதுர்த்தசியில் சிவராத்திரி விரதம் கொள்ளத்தக்கது. சாந்திர மாத்தில் அனுஷ்டித்தல் குற்றம் என்று செப்புகின்றது.

நவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகர் சதுர்த்தி விரதங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி சாந்திர மாத்திலும், சிவராத்திரி, கேதார விரதம், மஹோற்சவ தீர்த்தம் முதலியவை சௌர மாதத்தாலும் அனுஷ்டிக்க வேண்டும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

இக்காரணம் பற்றியே (சௌரமான) மாசியில் வரும் (சாந்திரமான) மாககிருஷ்ண சதுர்த்தசியில் மஹாசிவராத்திரி பஞ்சாங்கங்களில் குறிக்கப்பட்டு வரலாயிற்று. பிரோமதூத (1990-91), சோபகிருது (1963-64), தாரண (1944-45), குரோதன (1925-26), பராபவ (1906-07), சர்வஜித் (1887-88) ஆகிய வருடங்களில் மாசி மாதத்தில் குறிக்காது தை மாதத்தில் வரப்பெற்ற மாக கிருஷ்ண சதுர்த்தசியில் சிவராத்திரி குறிக்கப்பட்டிருப்பதைக் காணலும்.

தொடர்ச்சியாக 18 வருடங்கள் மாசி மாத கிருஷ்ண சதுர்த்தசியில் மஹா சிவராத்திரியைக் குறித்த பஞ்சாங்க கணிதர்கள் 19 வருடங்களுக்கு ஒரு முறை தை மாதத்தில் குறித்ததற்குரிய காரணம் யாதெனில் சௌரமாதமும், சாந்திர மாதமும் இணைந்துவரினும் 12 சௌரமாதங்களில் ஒரு அதிக சாந்திர மாதம் வரும். 19 வருடத்திற்கு ஒருமுறை பங்குனி (மீன) மாதத்தில் அதிக சாந்திர மாதம் வரும். 19 வருடத்திற்கு ஒருமுறை பங்குனி (மீன) மாதத்தில் அதிக சைத்ரம் வரும். அப்போது மாசி மாதத்தில் அதிக சைத்ரம வரும். அப்போது மாசி (கும்ப) மாதத்தில் பாற்குணமும், தை (மகர) மாதத்தில் மாகமும் வரப்பெறும். அதேபோல் இவ்வருடம் தை மாதத்தில் மாக மாசம் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

19 வருடத்திற்கு ஒரு முறை தை மாதத்தில் வரும் மாக கிருஷ்ண சதுர்த்தசியில் மஹாசிவராத்திரி குறிக்கப்பட்டதற்குரிய காரணத்தை ஆராய்வோம். பூர்வகாரணாகமம் சிவராத்திரி பூஜாவிதிப்படலம் 12ஆவது சுலோகத்தில் சூரியன் கும்பராசிக்குப் பிரவேசிக்கும் முன் தை மாதக் கடைசியில் பூஜிக்க வேண்டுமென கூறப்பட்டிருக்கிறது.

இக்கூற்றை ஆழ்ந்து சிந்திக்குமிடத்து; பூர்வகாரணாகமம் (சௌரமான) மாசி மாதத்தில் வரவேண்டிய (சாந்திரமான) மாகமாதம் சில காலங்களில் அவ்விதம் இசைந்து வராது தை மாதத்தில் வரப்பெறுவதால் அம்மாதத்தில் இருக்கப்பெறும் மாககிருஷ்ண சதுர்த்தசியில் சிவராத்திரி கொள்ளப்பட வேண்டுமெனக் கருதியே அவ்விதம் குறிக்கப்பட்டுள்ளது. (மாசி கிருஷ்ணபட்ச சதுர்த்தசி இல்லாத பட்சத்தில்)

நாரதஸம்ஹிதையில் அர்த்தராத்திரி சம்பந்தமுடைய மாககிருஷ்ண சதுர்த்தசியில் யாவனொருவன் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கிறானோ அவன் அஸ்வமேத யாகத்துக்கு ஒப்பான பலனையடைவான் எனவும், காமிகாகமம், உத்தரபாகம் சிவராத்திரி பூஜா விதிப்படலம் 4ஆம், 5ஆம் சுலோகங்களில், மாக மாதத்திலே கிருஷ்ண பசஷ சதுர்த்தசி வருகிற இரவு சிவராத்திரியாகும். (அது) எல்லாப் புண்ணியங்களையும் நன்மைகளையும் தருவது. அந்த நாளில் சிவாலயத்திலே சிவலிங்கத்திற்குப் பூஜை செய்யப்பட வேண்டும் எனக் கூறப்பட்டிருப்பதின் கருத்தை நோக்குமிடத்து மாக மாதமே சிவராத்திரிக்கு விசேடமுடையதென்பது புலனாகிறது.

இக்காரணங்கள் பற்றியே பஞ்சாங்க கணிதர்கள் (சௌர) மாசியில் வரும் சாந்திரமாத பால்குண கிருஷ்ண சதுர்த்தசியிற் குறிக்காது. தை மாதத்தில் வரும் மகாகிருஷ்ண சதுர்த்தசியில் மஹா சிவராத்திரியைக் குறிக்கலாயினர் என்று சொல்லலாம்.

சௌரமானமாசி மாத கிருஷ்ண சதுர்த்தசியானது இல்லாமல் இருக்கும்போதும், மாசியோடு சேர்ந்து பங்குனி மாத ராத்திரியில் வருகிற சதுர்த்தசி கிரகிக்கத்தக்கது. மார்கழி மாதத்தை அடைந்த புஷ்ய மாதத்தைப் போல் தை மாதத்தை அடைந்த மாகத்திற்கு நிஷேதம் என்று சொல்லி இருப்பதால் தை மாதத்தை அடைந்த மாகமாத கிருஷ்ண பசஷ சதுர்த்தசியானது தள்ளத்தகுந்ததாக இருக்கிறது.

மாசி மாதத்தை அடைந்த மாக கிருஷ்ண சதுர்த்தசி தானே கிரகிக்கத்தக்கதாக இருக்கிறது. சூரியன் கும்ப ராசியை அடைந்த காலமே மாகம் என்ற பெயரை அடைகிறது. மேற்படி மாகமாத கிருஷ்ண சதுர்த்தசி மகாநிசியில் சிவராத்திரி பூஜை செய்ய வேண்டும் என்பது காரணாகமம் கூறும் விதி.


**தே. சுடலைமுத்து**
தலைமையாசிரியர்
ஆதீன நடுநிலைப் பள்ளி, திருவாவடுதுறை.


காமிகாகமத்தில் அனாதி சைவ (சிவபெருமான்), ஆதி சைவ (தீட்சை பெற்ற சிவாச்சாரியார்கள்), மஹாசைவ (தீட்சை பெற்ற அந்தணர்கள்), அநுசைவ (தீட்சை பெற்ற சைவர்கள்), அந்திய சைவ (தீட்சை பெற்ற வேளாளர்கள்), அவாந்தர சைவ (தீட்சை பெற்ற ஹரிஜன்), பிரவர சைவ (பிற மதத்திலிருந்து சைவராக மாறியவர்கள்) ஆகியோர் சௌரமானம் அனுஷ்டித்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

சைவப் புராணத்தில் த்விஜர் முதலியவர்களுக்கு விருதாதிகளின் பலனை சாந்திரமானத்தால் அடைய விரும்பினும் உபாகர்மம், பிதுருகார்யம், சிவராத்திரி விரதம் இவைகளுக்குச் சாந்தரமானம் கூடாதென கூறியிருக்கின்றது. காமிகாமகத்தில் பரார்த்தாலயங்களில் சௌர மானத்திலேயே செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டிருக்கிறது. சௌரமானத்தை நீக்கி சாந்திரம் முதலிய மாதத்தால் செய்வாராகில் ஆயுசு புத்திரன் ஆகியவை நாசமாவதோடு கர்மம் பயனற்றதாகும்.

விரோதி வருடம் தை மாதம் 30ஆம் திகதி (12-02-2010) வெள்ளிக்கிழமை சதுர்த்தசி திதி 60.00 கும்பரவி 49.22 மாசி மாதப் பிறப்பு (இரவு 01.48 மணிக்கு) இருந்தாலும் தை - மாசி சம்பந்தமுடைய சிவராத்திரி மத்தியம் எனக் கூறுவதால்,

மாசி மாதம் 29ஆம் திகதி (13-03-2010) திரயோதசி- திதி 42.38 நாழிகை இருப்பதால் மாசி மாதம் 30ஆம் திகதி (14-03-2010) சதுர்த்தசி 47.33-இருப்பினும் மீன ரவி 37.46 பங்குனி மாதப் பிறப்பு (9 மணிக்கு) ஆரம்பித்து விடுவதால் மாசி - பங்குனி சம்பந்தமுடையதாகிவிடுகிறது.

தை - மாசி சம்பந்தமுடையது. மாசி - பங்குனி சம்பந்தமுடையது. இரண்டில் மாசி கிருஷ்ணபட்ச சதுர்த்தசியே கிரகிக்கத்தக்கது என்பதால் 13-03-2010 மாசி மாதம் 29ஆம் திகதி மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்க வேண்டும் எனத் தெளிவாகிறது.

மகா சிவராத்திரி ஆதீனத்திலும் ஆதீனத் திருக்கோயில்களிலும் மாசி மாதம் 29ஆம் திகதி (13-03-2010) சனிக்கிழமையன்று நடைபெறும்.

(முற்றும்)

## இலங்கையில் ஊடகங்களுக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் கிடையாது

### ஊடக அமைச்சர்

இலங்கையில் ஊடகங்களுக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் கிடையாதென ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். சில உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களில் தெரிவிக்கப்படுவதனைப் போன்று ஜனாதிபதி தேர்தலின் பின்னர் இலங்கையில் எவ்வித ஊடக அடக்குமுறையும் இடம்பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர்கள் எவரேனும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குவார்களாயின் நேரடியாகத் தம்மிடம் முறைப்பாடு செய்ய முடியும் எனவும் உரிய விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதுவரையில் அவ்வாறான எந்தவொரு முறைப்பாடும் தமக்குக் கிடைக்கப்பெறவில்லையெனக் குறிப்பிட்ட அவர் ஊடக ஒடுக்குமுறை மேற்கொள்ளப்படுவதாக் எந்தவொரு ஊடகமும் தம்மிடம் இதுவரையில் தெரிவிக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை கண்காணிப்பகம் ஊடக அடக்குமுறை இடம்பெறுவதாக அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும் இது தொடர்பில் தம்மைத் தொடர்பு கொண்டால் விளக்கமளிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் காணாமற்போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எகனலியகொட தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (6)

## வடக்கு-கிழக்கு மீள்குடியேற்ற நடவடிக்கைக்கு அமெரிக்கா ரூபா 3 மில்லியன் நிதி உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா மூன்று மில்லியன் ரூபா நிதி உதவி வழங்கத் தீர்மானித்துள்ளதென லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச அபிவிருத்தி தொடர்பான அமெரிக்க பிரதிநிதிகளின் ஊடாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் இது குறித்து ஆய்வு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தூதரக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் தங்களது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு தேவையான போக்குவரத்து வசதிகளை அமெரிக்கா ஏற்படுத்திக் கொடுக்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரிக்கா புட்டீனாஸ் தெரிவித்துள்ளார். (6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானில்
# ஆளில்லாத விமான ஏவுகணை தாக்குதலில்31 தீவிரவாதிகள் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வடக்கு வசீரிஸ்தான் எனப்படும் பழங்குடி இன மக்கள் வசிக்கும் பகுதியில் மீரான்ஷா நகர் அருகிலுள்ள தட்டா கேல் என்ற பகுதியில் ஆள் இல்லாத 8 இற்கும் மேற்பட்ட உளவு விமானங்கள் பறந்து ஏவுகணைகளை வீசித் தாக்கின. இந்தப் பகுதி ஆப்கானிஸ்தான்-தலிபான் தளபதி ஜலாலுதீன் ஹக்கானி அவர் மகன் சிராஜு தீன் ஆகியோர் கட்டுப்பாட்டில் உள்ளது.

தலிபான் குழுக்களில் மிக அபாயகரமானது ஹக்கானி தலைமையிலானதுதான் என்றும் காபூலில் இந்திய தூதரகம் மீது தாக்குதல் நடத்தியதும் இந்தக் குழுதான் என்றும் அமெரிக்கா நம்புகிறது.

இந்தப் பகுதியில் ஆள் இல்லாத விமானங்கள் 19 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தின. இந்த ஏவுகணைகள் வீடுகள், கார்கள், பதுங்குகுழிகள் ஆகியவற்றை தாக்கின. இதில் 31 தீவிரவாதிகள் பலியானார்கள். அவர்களில் 2 பேர் தலிபான் தளபதிகள் ஆவார்கள். வெளிநாட்டு தீவிரவாதிகள் சிலரும் பலியானார்கள்.

இடிபாடுகளில் சிக்கி காயம் அடைந்தவர்களை மற்ற தீவிரவாதிகள் மீட்டபோது அவர்கள் மீதும் ஏவுகணைகள் வீசப்பட்டன. பல மணி நேரத்துக்கு இந்த தாக்குதல் நடந்தது.

கடந்த 18 மாதங்களில் 70 ஏவுகணைத் தாக்குதல் நடந்தன. இதில் 70 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (6)

# ஈராக்கில் ஷியா முஸ்லிம்களின் புனித நகரில் குண்டு வெடிப்பு
## 10 பேர் பலி; 90 பேர் காயம்

(பக்தாத்)

ஈராக் நாட்டில் ஷியா முஸ்லிம்களின் புனித நகராக விளங்குவது கெர்பாலா ஆகும். இங்கு நிறுத்தப்பட்டு இருந்த மோட்டர்சைக்கிளில் வைக்கப்பட்டு இருந்த குண்டு வெடித்ததில் 10 பேர் பலியானார்கள். 90 பேர் காயமடைந்தனர்.


கெர்பாலாவில் நடைபெறவுள்ள மதச் சடங்கையொட்டி ஆயிரக்கணக்கான ஷியா முஸ்லிம்கள் நடைப்பயணமாக அந்த நகருக்கு செல்லவிருந்தனர். அவர்களைப் பழிவாங்கும் நோக்கில் தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த திங்கட்கிழமை பக்தாத்தில் ஷியா முஸ்லிம்கள் நடைப் பயணமாக புறப்படுவதற்காக கூடி இருந்தபோது நடந்த தாக்குதலில் 40 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (6)

# டுபாய் கடலில் செயற்கைத்தீவுகள்

டுபாய் அருகே கடலில் புதிதாக தீவுகள் அமைக்கும் பணி 2001இல் ஆரம்பிக்கப்பட்டது. பாமாயில் மரம் போன்று அமைக்கப்பட்டுள்ள இத்தீவுகளுக்கு ஜுமாரியா என்றும் பாம் தீவு எனவும் பெயரிடப்பட்டுள்ளது.

இதற்காக கடலில் இருந்தும் வேறு இடங்களில் இருந்தும் ஐந்து கோடி கியூபிக் மீற்றர் அளவு மணல் சேகரிக்கப்பட்டு இங்கு கொட்டப்பட்டது. பொசியன் கடலில் அமைந்துள்ள இந்தத் தீவு கடல் மட்டத்தை விட உயரமாக அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அப்பகுதியில் 2003ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை உலகதீவுகள் எனும் பெயருடன் 300 குட்டித் தீவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக 32 கோடி கியூபிக் மீற்றர் மணல் 3.7 கோடி தொன் பாறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இத்தீவுகளில் கடல் நீர் புகாதவாறு பாதுகாப்பு அமைப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)



பூமிக்கு மேலே சுற்றிவரும் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து எடுக்கப்பட்ட மேற்படி செயற்கை தீவுகளின் தோற்றம்

# மூளை பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க புதிய முறை

(லண்டன்)

மூளை பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு கிசிச்சை அளிப்பதற்கு புதிய முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான மூளைப் பாதிப்பினால் சிந்தனை ஆற்றலை இழந்த நோயாளிகளுடன் தொடர்பு கொள்ளக் கூடிய நவீன முறையொன்றை மருத்துவ ஆய்வாளர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

பிரைன் ஸ்கேனிங் என்ற முறையின் மூலம் மூளை பாதிக்கப்பட்ட நபருடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடியும் எனப் பிரித்தானிய மற்றும் பெல்ஜிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மூளை பாதிப்பினால் உலக தொடர்பு அற்றுப் போன நபர்களுடன் விசேட தொழில்நுட்ப முறையின் மூலம் தொடர்பாடக் கூடிய விசேட முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நினைவை இழப்பதற்கு முன்னர் காணப்பட்ட நிலைமைகள் தொடர்பிலான கேள்விகளுக்கு நோயாளிகள் உரிய பதில்களை அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)




# இணைய பாவனைக்கும் மன உளைச்சலுக்கும் தொடர்பு
## பிரித்தானிய ஆய்வாளர்கள்

(லண்டன்)

நீண்ட நேரம் இணையத்தைப் பயன்படுத்துவோருக்கு அதிக மன உளைச்சல் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகப் பிரித்தானிய ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதிக நேரம் இணையத்தைப் பயன்படுத்தும் நபர்கள் மன அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளமை அண்மைய ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

எனினும் அநேகமான இணைய பாவனையாளர்கள் மன நோய்களினால் பீடிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இணையத்தின் ஊடாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புக்களின் மூலமும் இந்த விடயம் தெளிவாகியுள்ளது.

16 வயது முதல் 51 வயது வரையிலான நபர்களிடம் ஆய்வு நடத்தப்பட்ட இந்த ஆய்வுகளில் பாலியல், சூதாட்டம் மற்றும் சமூக வலைப்பூக்களில் அதிக நாட்டம் கொண்டவர்களுக்கு இவ்வாறான பாதிப்புக்கள் அதிகம் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இணைய பாவனைக்கு அடிமையானவர்களே அதிகளவில் மன உளைச்சளினால் பாதிக்கப்பட்டுவதாகச் சுட்டிக்காட்டப்படும் அதேவேளை மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் நீண்ட நேரம் இணையத்தைப் பயன்படுத்துகின்றார்களா? அல்லது இணையத்தை நீண்ட நேரம் பயன்படுத்துபவர்கள் மன உளைச்சலினால் பாதிக்கப்படு கின்றார்களா? என்ற கேள்விக்கு இன்னமும் சரியான பதில் கிட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# ஹெயிட்டி பூகம்பத்தில் பலியானோர் எண்ணிக்கை2 இலட்சமாக உயர்வு

ஹெட்டியில் கடந்த மாதம் 12ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தில் கட்டிடங்கள் இடிந்ததால் இடிபாடுகளில் சிக்கி பலர் உயிரிழந்தனர் தொடக்கத்தில் ஒரு இலட்சம் பேர் இறந்திருக்கலாம் எனக் கருதப்பட்டது. ஆனால் தோண்டத் தோண்ட பிணங்கள் குவிந்த வண்ணம் இருந்தது.

இந்த நிலையில் தற்போது பலியானோர் எண்ணிக்கை 2 இலட்சமாக உயர்ந்துள்ளது. 3 இலட்சம் பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் 4 ஆயிரம் பேர் உடல் உறுப்புக்களை இழந்துள்ளனர்.

இந்தத் தகவலை ஹெயிட்டி பிரதமர் ஜுன் மாஸ் பெல்லரிவ் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் அங்கு மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (6)

# பயங்கரவாத அமைப்புகளுக்கு துணைபோகும் பாகிஸ்தான்
## அமெரிக்கா குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

பயங்கரவாதிகளுக்கு எதிராக ஒரு பக்கம் நடவடிக்கை எடுத்தாலும் மற்றொரு பக்கம் அவர்களுக்கு ஆதரவாக பாகிஸ்தான் செயற்படுகிறது என அமெரிக்க புலனாய்வுத்துறை உயர் அதிகாரி குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கப் புலனாய்வுத்துறை உயர் அதிகாரி டென்னிஸ் சி.பிளேர் அந்நாட்டின் செனட் குழுவிடம் சமர்ப்பித்துள்ள வருடாந்த அறிக்கையில் கூறியுள்ளதாவது; தெக்ரிக் - இ-தலிபான் பாகிஸ்தான்-அல்கொய்தா போன்ற அமைப்புக்கள் தங்களுக்குக் கேடு விளைவிக்கக் கூடியவை எனக் கருதி அவற்றுக்கு எதிராகப் பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதே நேரத்தில் ஆப்கான், தலிபான்களில் சில பிரிவுகளான ஹக்கானி தலிபான், குல்பகதூர் குரூப், கமாண்டர் நசீர் குரூப் போன்றவற்றுக்கு ஆதரவு தருகிறது. அந்தப் பிரிவினருடன் நெருங்கிய தொடர்பும் வைத்துள்ளது. இப்போதைக்கு இந்தக் குழுக்களால் பாகிஸ்தானுக்கு நேரடியாக மிரட்டல் இல்லை.

இந்திய இராணுவம் மற்றும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைச் சீர்குலைக்க இந்தப் பிரிவினர் பயன்படுவர் என்ற கருத்தில் அவர்களுக்குப் பாகிஸ்தான் ஆதரவு கொடுக்கிறது. இதுவே பாகிஸ்தானுக்கு எதிர்காலத்தில் அபாயமானதாக மாறிவிடும். எனவே இந்தப் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராகவும் பாக் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலக அளவில் இந்தியா மிகப் பெரும் சக்தியாக உருவாகிக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் பிராந்திய அளவில் உறவுகளை மேம்படுத்த இந்தியா எடுத்து வரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை. பெரிய சக்தியாக உருவெடுத்துவரும் சீனாவுடன் மட்டுமன்றி மற்ற அண்டை நாடுகளுடனும் உறவுகளை மேம்படுத்த இந்தியா முற்பட்டுள்ளது.

குறிப்பாக போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானை சீரமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினாவும் சமீபத்தில் இந்தியா வந்து சென்றுள்ளார். சீனா மிகப் பெரிய சக்தியாக உருவாகும். அதை எதிர் கொள்ள உலக நாடுகள் தயாராக வேண்டும் என கடந்த ஆண்டு அமெரிக்கா வந்திருந்த பிரதமர் மன்மோகன்சிங் குறிப்பிட்டார்.

அதேநேரத்தில் எல்லைப் பிரச்சினை தொடர்பாக இந்தியா-பாகிஸ்தான் இடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அந்நாட்டுடன் சீரான உறவு இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்திய அரசு செயற்பட்டு வருகிறது. இருப்பினும் மும்பைத் தாக்குதலுக்குப் பின் பாகிஸ்தான் உடனான உறவு சீர்கெட்டுள்ளது. இவ்வாறு டென்னிஸ் சி. பிளேர் கூறியுள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக கடலோர பாதுகாப்பு பணியில் ரிமோட் மூலம் இயங்கும் கிளைடர் விமானம்



(இராமேஸ்வரம்)

தமிழக கடலோர பாதுகாப்பு கூடுதல் கண்காணிப்பு பணிக்காக,ரிமோட் கன்ட்ரொலில் இயங்கும் சிறிய கிளைடர் விமானம் பாம்பன் கடல் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளோட்டமாக பறக்க விடப்பட்டது.

தமிழக கடலோர பாதுகாப்பு பணியில் கடற்படை, கடலோர காவல் படையினர் ஈடுபடுகின்றனர். இந்நிலையில், கடலோர பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு, ரிமோட் கன்ட்ரோலில் இயங்கும் சிறிய கிளைடர் விமானம் பயன்படுத்தப்பட உள்ளது. பாம்பன் கடல் பகுதியில், கிளைடர் விமானத்தின் வெள்ளோட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

பெங்களூரைச் சேர்ந்த அரோரா நிறுவனம் தயாரித்துள்ள ஒரு மீற்றர் நீளமுள்ள இந்த விமானம் பற்றரியில் பறக்கக்கூடியது. இதன் இறக்கைகள் தானாகவே விரிந்து மடங்குவதால் இலகுவாக இயக்க முடியும்.

விமானத்தின் முன்பகுதியில் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. 500 அடி உயரம் வரை பறக்கக்கூடிய இந்த கிளைடர் விமானம், 10 கி.மீ சுற்றளவில் இருக்கும் பொருட்களைபடம்பிடித்துதரையில்உள்ளகட்டுப்பாட்டு அறையில் இருக்கும் கணனித் திரையில் தெளிவாகக் காட்டும். ஒரு கி.மீ சுற்றள வில் இருக்கும் பொருட்களை மிகவும் துல்லியமாக படம் பிடித்துக் காட்டும். தொடர்ந்து ஒரு மணி நேரம் பறக்கும்சக்திகொண்ட இந்தவிமானத்தைவலைதளத்தின் உதவியால் படகிலும் இறக்க முடியும்.

அரோரா நிறுவன பொறியிலாளர்கள் ஐயர் பிரவின் ஆகியோர் விமானத்தை பாம்பன் தெற்குவாடிகடல்பகுதியில் இயக்கி, வானில் நீண்ட நேரம் பறக்கச் செய்து கமரா மூலம் பாம்பன் கடல் பகுதியில் பிடிக்கப்பட்ட ஏரியல் வீயூ காட்சிகளை மொபைல் கட்டுப்பாட்டு அறையில் இந்த கணனித் திரையில் பார்த்தனர். இதுகுறித்து கடலோர காவல்படை எஸ்.பி. கூறியதாவது,

விமானத்தில் இரவு நேரத்திலும் தேவையான சென்சார் கமராக்களை பொருத்தி இயக்கலாம். அற்னியர் நடமாட்டம், கடலில் தத்தளிக்கும் படகு, கரையில் வாகனங்களின் போக்குவரத்தையும் கண்காணிக்கலாம். இதுபோல் ஹிலியம் வாயு நிரப்பப்பட்ட பலூனில் கமராக்கள் பொருத்தி, ரோந்துப் படகில் கட்டி பறக்கவிட்டும், கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட உள்ளது என்றார். (6)

# மருத்துவ புரட்சி படைக்கும் ஸ்டெம்செல் வங்கி முதன் முறையாக ஐதராபாத்தில் ஆரம்பம்

ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில், பாத்கோர் ஆய்வகம், தென்னிந்தியாவின், முதல் ஸ்டெம்செல் வங்கியை அமைத்துள்ளது. இந்தியாவில், ஸ்டெம்செல்லின் மருத்துவ பயன்பாடு குறித்த விழிப்புணர்வு, மக்களிடையே அதிகரித்து வருகிறது. இதனால், ஸ்டெம்செல் வங்கி வர்த்தகத்திற்கு, நல்ல வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஆண்டுக்கு 2.6 கோடி குழந்தைகள் பிறக்கின்றன. தொப்புள்கொடி ஸ்டெம்செல் சேமிப்பு இதில் முக்கியத்துவம் பெறுகிறது. இதனால், உலகளவிலான பல வர்த்தகர்களும், இந்தியாவில் அமைந்துள்ள ஸ்டெம்செல் வங்கிகள், வரும் 2012 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் அளவிலான சந்தையில் 17 சதவீதம். இந்தியாவில், பிறப்பு வீதம் அதிகம் என்பதால், இங்கு ஸ்டெம்செல் வங்கி அமைக்க அதிக வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பாத்கோர் ஆய்வு மையத்தைச் சேர்ந்த டாக்டர் ஜி.வி.பிரசாத் கூறுகையில், இந்தியாவில் கடந்த மூன்றாண்டுகளில், 25 ஆயிரம் தொப்புள் கொடி இரத்த மாதிரிகள் சேரிகரித்து வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விழிப்புணர்வு மக்களிடையே அதிகரித்து வருவதைத் தொடர்ந்து இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்றார்.

குழந்தை பிறந்ததும், அதன் தொப்புள் கொடியை வெட்டி, அதில் இருக்கும் இரத்தம் எடுத்து, பாதுகாத்து வைக்கப்படுகிறது. இந்த இரத்தத்தில் தான் மருத்துவ சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் ஸ்டெம்செல் காணப்படுகிறது. ஸ்டெம்செல்வங்கிகள் இந்த இரத்தமாதிரியை அதற்கென கிரியோஜெனிக் பெட்டகங்களில் விசேடமாகப் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. இவை, பிற்காலத்தில் ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சையளிக்க பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் இந்த தொப்புள் கொடி செல் என்பது உடற்கூறு அமைய காரணமாக இருப்பவை. எதிர்காலத்தில் திசுக்கள் அல்லது அவயங்கள் அல்லது சிலவகை செயற்பாட்டிற்கான இயக்க ஊக்கிகளாக பயன்படுத்த முடியும். ஸ்டெம்செல் பாதுகாப்பிற்கு 20 ஆண்டு காலத்திற்கான வாடகையாக இந்திய ரூபாயில் முதல் 1.05 இலட்சம் ரூபாய் வரையில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்நிலையில், பாத்கோர் ஆய்வகம், ஐதராபாத்தில், முதல் தொப்புள்கொடி இரத்த மாதிரி சேமிப்பு வங்கியை தொடங்கி உள்ளது. இது தென்னிந் தியாவில் அமைக்கப்பட்டுள்ள முதல் மையம் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# தெலுங்கானா மாநிலம் பற்றி ஆராய ஐந்து பேர் கொண்ட குழு அமைப்பு

தெலுங்கானா மாநிலம் அமைப்பது தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண 5 உறுப்பினர்களை கொண்ட நிபுணர்கள் குழுவை மத்திய அரசு கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தது. ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைக்க வலியுறுத்தி தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி தலைவர் சந்திர சேகரராவ் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்தார். இதனால் ஆந்திராவில் வன் முறை போராட்டங்கள் நடந்தன. கொந்தளிப் பான நிலை உருவானது. இதையடுத்து தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கப் படும் என்று கடந்த டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி மத்திய உள்த்துறை அமைச்சர் ப. சிதம்பரம் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து தெலுங்கானா மாநிலம் அமைக்க ஆதரவு தெரிவித்தும் எதிர்ப்பு தெரிவித்தும் ஆந்திராவில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வருகின்றன.

தெலுங்கானா மாநிலம் அமைக்கக் கோரி போராட்டம் நடத்தி வரும் கூட்டு நடவடிக்கை குழு மத்திய அரசுக்கு சாதகமான முடிவை பெப் ரவரி 7 ஆம் திகதிக்குள் அறிவிக்க வேண் டும் என கெடு விதித்திருந்தது. இந்த நிலையில் தெலுங்கானா பிரச்சினைக்கு தீர்வுகாண 5 பேர் கொண்ட நிபுணர் குழுவை மத்திய அரசு நேற்று முன்தினம் அமைத்தது. இந்த குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி பி.என். ஸ்ரீகிருஷ்ணா நியமிக்கப்பட்டுள்ளார் (6)



*இந்தியா வந்துள்ள லாவோஸ் நாட்டின் பிரதமரும், மக்களின் ஆதரவை பெற்றவருமான டோங்கு லோம் சிசி யோலித் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தார்.*

## பாரதச் செய்திகள்

# மீன்பிடி சட்ட மசோதாவுக்கு எதிர்ப்பு; மத்திய அரசின் போக்கில் மாற்றம்

கடல் மீன்பிடி தொழில் ஒழுங்குமுறை மற்றும் மேலாண்மை சட்டத்தை கொண்டு வருவதற்கு, பல்வேறு தரப்பிலும் கடும் எதிர்ப்பு நிலவி வருவதையடுத்து இச் சட்டம் எதிர்வரும் பட்ஜட் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படமாட்டாது எனவும் எல்லாத் தரப்பு மக்களின் கருத்துக்களை கேட்ட பின்னரே இறுதி முடிவெடுக்கப்படும் எனவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு, பல புதிய கட்டுப்பாடுகளையும், விதிகளையும் விதித்து, புதிய சட்ட மசோதாவை கொண்டு வருவதில் மத்திய அரசு தீவிரம் காட்டியது. கடல் மீன்பிடி தொழில் ஒழுங்குமுறை மற்றும் மேலாண்மை சட்டம் என்ற பெயரில் இதற்கான வரைவு மசோதாவை, மத்திய வேளாண் அமைச்சகம் தயாரித்து மத்திய அமைச்சரைவைக்கு அனுப்பி வைத்தது. அங்கு ஒப்புதலும் பெறப்பட்டு விட்ட நிலையில், இதை சட்டமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போது, இந்த சட்ட மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. தமிழகத்தில் மீனவ அமைப்புகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் என அனைத்து தரப்புமே, கடுமையாக கண்டனம் தெரிவிக்க ஆரம்பித்தன. காரணம், அந்தச் சட்டத்தின் படி குறிப்பிட்ட எல்லைவரை, குறிப்பிட்ட பகுதியில் தான் மீன் பிடிக்க வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட அளவுக்குத் தான் மீன் பிடிக்க வேண்டும். மீறினால் அபராதம், தண்டனை என மீனவர்களின் உரிமைகளை பாதிக்கும் வகையில் ஷரத்துகள் இருந்தன.

குறிப்பாக தமிழகத்தில் மிகப் பெரிய எதிர்ப்பு கிளம்பியது. போராட்டம், உண்ணாவிரதம் என மீனவ சங்க பிரதிநிதிகள் தீவிரம் காட்டத் தொடங்கியவுடன், மத்திய அரசு அழைத்து அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. இந்நிலையில் மீண்டும் நேற்று முன்தினம் இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது.

டில்லியில் உள்ள கிருஷிபவனில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில், நாடு முழுவதும் இருந்த பல்வேறு மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அப்போது அந்த பிரதிநிதிகள் மத்தியில் பேசிய அமைச்சர் சரத் பவார் இந்த சட்ட மசோதாவுக்கு பெரும் எதிர்ப்பு கிளப்பியிருப்பது உண்மையே. மீனவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. வரும் பட்ஜட் கூட்டுத் தொடரில் இந்த மசோதாவை தாக்கல் செய்ய திட்டமிட்டிருந்தோம். ஆனால் இம்மசோதா குறித்து இன்னும் நிறைய ஆராய வேண்டியிருக்கிறது.

இதனால் எதிர்வரும் பட்ஜட் கூட்டத்தொடரில் இந்த மசோதா தாக்கல் செய்வதை நிறுத்தி வைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது விடயமாக, மேலும் பல தரப்பினரிடமும் கருத்துக்களை கேட்டறிந்து, அதன் பின்னரே இறுதி முடிபெடுக்கப்படும் என்று தெரிவித்தார். (6)

# இலங்கை அகதிகள் உட்பட ஏழு பேருக்கு சிறை

சங்கரன் கோவில் அருகே உள்ள கிரிவலம் வந்த நல்லூர் பொலிஸ் சரகம் சென்னிகுளத்தை சேர்ந்தவர்கள் பழனிச்சாமி, நூற்பாலை உரிமையாளர் அவரது வீட்டில் கடந்த 23 ஆம் திகதி அன்று செய்துங்க நல்லூரை சேர்ந்த பாபு (28), சின்ன ஒப்பனையாளர் புரத்தை சேர்ந்த வெள்ளைச்சாமி (47), புகலிங்கபுரத்தை சேர்ந்த சண்முகராஜ் (45).

பாளையை சேர்ந்த ரவிச்சந்திரன் (24), கோபால சமுத்திரம் இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த ஆறுமுகம் மகன் ராஜேந்திரன் (26), அதே முகாமைச் சேர்ந்த அசோக் (27), இளங்கோ (26), விசு (27), வேலூர் அகதிகள் முகாமைச் சேர்ந்த கர்ணா (25) ஆகிய 9 பேர் கொண்ட கும்பல் பழனிச்சாமி அவரது மாமியார் அலமேலுமங்கை ஆகியோரை தாக்கி தங்கச் சங்கிலி, வளையல், கம்பல் ஆகியவற்றை கொள்ளையடித்தனர்.

மேலும் பழனிசாமியின் மனைவி தனலட்சுமி மற்றும் குழந்தைக்குக்கு மயக்க ஊசி போட்டு ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகளையும் ரொக்கப்பணம் 10 ஆயிரத்தையும் கொள்ளையடித்து சென்றனர்.

இதுகுறித்து கிரிவலம் வந்தநல்லூர் பொலிசார் வழக்குப்பதிவு செய்து 9 பேரையும் கைது செய்தனர். வழக்கு நடைபெற்று கொண்டு இருக்கும்போது இலங்கை அகதி ராஜேந்திரன், ரவிச்சந்திரன் ஆகியோர் இறந்து விட்டனர்.

இது தொடர்பான வழக்கு சங்கரன் கோவில் உதவி அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி பாபு, வெள்ளைச்சாமி, கர்ணா, அசோக், இளங்கோ, விசுவநாதன், சண்முகராஜ் ஆகிய 7 பேருக்கு 7 வருடம் கடுங்காவல் தண்டனையும், ரூ 3 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்புக் கூறினார்.

இதனை தொடர்ந்து 7 பேரும் பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர் (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்ய மூன்று விசேட குழுக்கள்

## ஐ.ம.சு.கூ. நியமித்துள்ளது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காக 3 விசேட குழுக்களை நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ஜோன் செனவிரட்ன மற்றும் அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோர் இந்தக் குழுக்களுக்கு தலைமை வகிக்கின்றனர்.

வடக்கு, வட மத்திய, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் போட்டியிடும் வேட்பாளர்களை சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவு செய்யவுள்ளார். மேல், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் போட்டியிடும் வேட்பாளர்களை மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவு செய்யவுள்ளார்.

தென்மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் போட்டியிடும் வேட்பாளர்களை ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவு செய்யவுள்ளார்.

இதேவேளை வேட்பாளர் தெரிவில் முறைகேடுகள் இடம்பெற்றால் அது குறித்து பிரதமர் ரட்ணசிறி விக்ரம நாயக்கவின் தலைமையிலான குழுவிடம் முறைப்பாடு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எத்தனை வேட்பாளர்களை களமிறக்குவது என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் ஜே.வி.பி. கட்சி அறிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாக அதன் தலைவர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கண்டி அல்லது நுவரெலியா மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட விரும்புவதாக எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (6)

# சொற்பொழிவு

(வடமராட்சி கிழக்கு)

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு உலகவேதாந்த மன்ற தலைவர் சுவாமி வேதானந்தா ***வாழ்க்கைக்கு ஆன்மீக வழி*** என்னும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றவுள்ளார்.

இவர் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-99)

# திஸ்ஸமகாராம பிரதேச சபையை முடிந்தால் மக்களின் விருப்பத்துடன் கைப்பற்றுங்கள்

## ஜே.வி.பி. அரசாங்கத்திற்கு சவால்

(கொழும்பு)

பிரதேசசபை உறுப்பினர்களின் ஊதியத்தைக் கூட திஸ்ஸ மஹாராமையை கட்டியெழுப்பும் கணக்கில் வைப்புச் செய்து மக்கள் சேவையில் ஈடுபட்டு வரும் ஜே.வி.பியின் ஆளுகைக்குட்பட்ட திஸ்ஸமஹாராம பிரதேச சபை அரசாங்கம் சூழ்ச்சியாக கைப்பற்ற முயற்சிப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது கட்சியின் ஆட்சியில் இருக்கும் திஸ்ஸ மஹாராம பிரதேச சபையை முடிந்தால் மக்களின் விருப்பத்துடன் கைப்பற்றுமாறு அவர் அரசாங்கத்திற்கு சவால் விடுத்துள்ளார். ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அனுர குமார திஸாநாயக்க இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் உள்ள அனைத்து பிரதேசசபைகளை விட திஸ்ஸமஹாராம முன்னிலையில் இருக்கிறது. அரசாங்கம் பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பிரதேச சபையை தன்வசப்படுத்த முயற்சித்து வருகிறது எனவும் அநுரகுமார குற்றம் சுமத்தியுள்ளார். (6)

# மன்னார் -யாழ்ப்பாணம் பஸ்கட்டணத்தில் மாற்றம்

(கொழும்பு)

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான இலங்கை போக்குவரத்துச் சபையால் நடத்தப்படும் போக்குவரத்துக்கான பஸ் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக மன்னார் இ.போ.ச.சாலை முகாமையாளர் எஸ்.எம். அஸ்கர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கான ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின் கடந்த மாதம் ஆரம்பத்தில் இருந்து மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான இலங்கை போக்குவரத்துச் சபையினால் போக்குவரத்து சேவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச் சேவையில் ஒரு நபருக்கு தலா 300/- ரூபா கட்டணம் அறவிடப்பட்டு வந்தது. ஆனால் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இக்கட்டணம் 221 /- ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. இக்கட்டணம் குறைக்கப்பட்டதிற்கான காரணம் தெரிவிக்கப்படுகையில்,

கடந்த காலத்தில் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புடன் இடம்பெற்றதாகவும் இதனால் பிரயாண பாதை இடையில் எந்தவொரு பயணியும் ஏற்றப்படாமல் பிரயாணம் தொடர்ந்தமையால் தலா ஒரு பிரயாணத்திற்கு 300 ரூபா அறவிடப்பட்டது.

ஆனால் இப்பொழுது இச்சேவையில் இடைநடுவில் உள்ள பயணிகளும் ஏற்றிச் செல்லப்படுவதனால் இ.போ. ச. பஸ் கட்டணத்துக்கு அமைய வழமையான பஸ் கட்டணம் 221 ரூபா அறவிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

மன்னாரில் இருந்தும் யாழ்ப்பாண்த்தில் இருந்தும் தலா மூன்று பஸ் சேவைகள் தற்பொழுது இடம்பெறுகின்றன. மன்னாரில் இருந்து காலை 4.30, 5.30, 8.30 மணிக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கு காலை 6.30, 8.00,நண்பகல் 12 மணிக்கும் இப் பஸ் சேவைகள் இடம் பெறுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (6)

# மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் தேசிய கொள்கைத் திட்டமொன்று வகுக்கப்படவுள்ளது

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)



இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் தேசியகொள்கைத் திட்டமொன்று வகுக்கப்படவுள்ளதாக மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமர சிங்க தெரிவித் துள்ளார்.

மனித உரிமை பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கைத் திட்ட வரைவு அண்மையில் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவுத் திட்டம் பொதுமக்கள் அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய தரப்பினருக்கு விநியோகம் செய்யப்பட்டு கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட தன் பின்னர் இறு தித் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு பின்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் கொள்கைத் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றதா என்பதனை மனித உரிமைகள் அமைச்சு நேரடியாக கண்காணிக்கத் திட்டமிட்டுள்ளது.

மனித உரிமை பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தல் தொடர்பான தரவுகளை பொதுமக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் பெற்றுக்கொள்ள ஆவண செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் மனித உரிமை நிலைமை ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு வழங்கப்பட்ட உறுதிமொழி வியன்னா பிரகடன அமுலாக்கம் போன்றவற்றை கருத்திற்கொண்டு தேசிய கொள்கைத் திட்டமொன்றை வகுக்கத் தீர்மானித்ததாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கொள்கைத் திட்டம் நீண்டகால ஆய்வின் பின்னர் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# ஐக்கிய ஊழியர் சங்கத்தின் 4 உறுப்பினர்கள் பணி இடை நிறுத்தம்

(கொழும்பு)

சுயாதீன தொலைக்காட்சி மற்றும் லக்ஹன்ட வானொலி ஆகியவற்றில் பணியாற்றிய ஐக்கிய ஊழியர் சங்கத்தின் 4 உறுப்பினர்கள் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

சுயாதீன தொலைக்காட்சியின் பொது முகாமையாளரின் கையெழுத்துடன் கூடிய கடிதம் மூலம் இந்த பணி இடைநிறுத்தம் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறுகிய அரசியல் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கையை வன்மையாக கண்டிப்பதாக ஐக்கிய ஊழியர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் லால் பெரேரா தெரிவித்துள்ளார்.

எவ்வித நியாயமான காரணங்கள் இன்றி ஐக்கிய ஊழியர் சங்க உறுப்பினர்கள் என்ற வகையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த பணி இடைநிறுத்த நடவடிக்கைக்கு எதிராக உரிய முனைப்புகள் மேற்கொள்ளப்படும் எனவும் லால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய ஊழியர் சங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# கட்சித்தாவல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம்

(கொழும்பு)

கட்சித் தாவல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் திட்டமொன்றை ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சித் தாவல்களில் ஈடுபடும் உறுப்பினர்களை பதவி விலக்குவதற்கு கட்சித் தலைமைக்கு அதிகாரம் வழங்கும் சத்தியக் கடதாசி ஒன்றை சமர்ப்பிக்கும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

கேகாலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகர்கள் இந்த யோசனைத் திட்டத்தை முன்வைத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவினால் முன் வைக்கப்பட்ட யோசனைத் திட்டத்திற்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஏனைய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

உறுப்பினர்கள் கட்சித் தாவல்களில் ஈடுபடும் போது வாக்காளர்கள் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த யோசனைத் திட்டம் எதிர்வரும் கட்சி செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. (6)

# இலங்கை கிரிக்கெட் அணி மீதான தாக்குதல்; அறிக்கை காலதாமதம் குறித்து கேள்வி

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது பாகிஸ்தானின் லாகூர் நகரில் கடந்த வருடம் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பான அறிக்கை காலதாமதமாவதற்கான உரிய காரணத்தை அந்நாட்டு நாடாளுமன்றத்தின் விளையாட்டுக்குப் பொறுப்பான குழு கோரியுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட மாநில பாதுகாப்புச் செயலாளருக்கும் பொலிஸ் தலைமை அதிகாரிக்கும் இம் மாத இறுதியில் நாடாளுமன்றக் குழுவினரைச் சந்திக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த இலங்கை அணியினர் மீது கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இனந்தெரியாதோரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# எளிமையான பயிற்சிகள் மூலம் மனநலத்தைப் பேணமுடியும்

(கொழும்பு)

உடல் நலத்தை நன்றாக வைத்துக் கொள்ள எடுக்கப்படும் எளிமையான பயிற்சிகள் மூலமாக ஒருவர் தனது மனநலத்தையும் பேண முடியும் என்று தெரியவந்துள்ளது.

டிமென்ஷியா எனப்படும் மூளைக் கோளாறு ஏற்படுவதற்கான வாய்ப்பு எளிய உடற்பருமன், இரத்த அழுத்தம் இரத்தக் கொழுப்பு ஆகியவற்றை கட்டுக்குள் வைத்துக்கொள்ள எந்த வயதில் உடற்பயிற்சி செய்யத் தொடங்கினாலும் அதனால் பலருக்கு டிமென்ஷியா மனநோய் வரும் வாய்ப்பு குறைகிறது என சர்வதேச நிபுணர் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

குறுக்கெழுத்து மனக்கணக்கு போன்ற மூளைக்கு வேலை தரும் பயிற்சிகளைப் பழகுவதால் டிமென்ஷியா மூளைக் கோளாறு வருவதற்கான ஆபத்து குறையும் என்று பரவலாகக் கருதப்படுகிறது. ஆனால் அப்படி குறையும் என்பதற்கு அறிவியல் ஆதாரங்கள் இல்லை என்றும் இந்த ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





செரண்டிப் சிறுவர் இல்ல அனுசரணையுடன் உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வன்செயலில் தாய் தந்தையை இழந்த சிறார்களுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கவிருக்கும் பராமரிப்புப் பணம் வழங்கும் அங்குரார்ப்பண நிகழ்வை செரண்டிப் நிறுவன உதவியாளர் திருமதி கு.சந்திராதேவி மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் நிறுவனத்தின் தொடர்பாளர் ச.ஏகாம்பரநாதன் நிற்பதையும், நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-நல்லூர் செய்தியாளர்)

## இணையத்தள அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய இணையத்தள (www.jcmmv.com) அங்குரார்ப்பண வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற தபால்திபர் மு.சண்முகம் கலந்து இணையத்தளத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். (6-14)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

எக்ஸ்போ எயார் விமான சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்றுவருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு புனித பரியோவான் கல்லூரி எதிர் புனித பத்திரிசியார் கல்லூரியும், நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ்.இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் மோதவுள்ளன. (6-4)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(தனங்கிளப்பு)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி விளையாட்டுத் திடலில் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4-37)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(இருபாலை)

வலி கிழக்கு பிரதேச செயலர்பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (4-134)

## சமுர்த்தி நிவாரண பயனாளிகளுக்கு

(காரைநகர்)

ஜனவரி மாத சமுர்த்தி நிவாரணத்தை எதிர்வரும் எட்டாம் திகதிக்கு முன்பாக பெற்றுக் கொள்ளுமாறு காரைநகர் பல.நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் பயனாளிகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கான ஜனவரி மாத நிவாரணம் தற்போது பட்டியல் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே குறித்த பயனாளிகள் தமது பங்கீட்டு அட்டையுடன் சமுகமளித்து நிவாரணத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-246)

## காலபோக மழையின்மையால்
# நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் பாதிப்பு

யாழ்.குடாநாட்டில் தற்போது மழை இன்மையால் நெற் பயிர்களுக்கு, குளம் மற்றும் கிணறுகளிலிருந்து நீர் இறைப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

குடாநாட்டு விவசாயிகள் பருவ மழையை நம்பியே காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் இம்முறை மேட்டு நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் போதிய நீர் இன்றி வெப்பத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

நெற்கதிர்கள் வந்த நிலையில் இப் பயிர்களுக்கு அருகாமையிலிருக்கும் குளங்கள் கிணறுகளிலிருந்து நீர் இறைப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளமையைக் காணமுடிகிறது. (6-49)

## வடமராட்சி கிழக்கில்
# மீள்குடியமர்த்தப்படவுள்ள மக்களின் விபரங்கள் பதிவு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் நோக்கில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் செம்பியன்பற்று, தாழையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் விபரங்கள் பதியப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வடமராட்சி கிழக்கில் மணற்காடு தொடக்கம் அம்பன் வரையான பகுதிகளில் மாத்திரமே மீள்குடியமர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் இதனால் மேற்படி இடங்களுக்கு தம்மை மீள்குடியமர்த்துமாறு மக்கள் கோரிக்கை வழங்கியதையடுத்தே இப்பதிவுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4-99)

# யாழ்ப்பாணத்திற்கான நேரடி பஸ்சேவையினை ஆரம்பித்து தருமாறு மக்கள் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

மணற்காடு, அம்பன், பொற்பதி ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் யாழ்ப்பாணத்திற்கான நேரடி பஸ் சேவை ஒன்றினை ஆரம்பித்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப் பகுதியில் வசிக்கும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் உட்பட அனைவரும் யாழ்ப்பாணம் செல்வதற்கு ஏறத்தாழ 17 கிலோமீற்றர் தூரம் நடந்தே பருத்தித்துறை நகரை வந்தடைந்து அதிலிருந்தே தமது பயணத்தை தொடர வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்பகுதிக்கு நேரடியான பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-4-99)

# கலாசார சீரழிவில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்
## பொதுமக்கள் கோரிக்கை

(காரைநகர்)

காரைநகர் கசூர்னாக் கடற்கரைக்கு செல்லும் சிலர் கலாசார சீரழிவில் ஈடுபட்டு வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் தென் பகுதியிலிருந்து பெருமளவான பொது மக்கள் (உல்லாச பயணிகளாக) குடாநாட்டுக்கு வருகை தந்த வண்ணமுள்ளனர். இவ்வாறு வருகைதரும் உல்லாசப் பயணிகள் காரைநகர் கசூர்னாக் கடற்கரைக்கும் பெருமளவில் படையெடுத்து வருகின்றனர். இதே நேரம் யாழ்.குடாநாட்டு பொதுமக்களும் இவர்களுடன் வருகைதரும் அதேவேளை சில இளைஞர், யுவதிகள் கலாசார சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கூடுதலாக தனியார் கல்வி நிலையத்திற்கு என செல்லும் குறித்த தனியார் கல்வி நிலையத்திற்கு செல்லாது கசூர்னாக் கடற்கரைக்கு வருகின்றனர்.

இவ்வாறு இந்த வாரம் தனியார் கல்வி நிலையத்திற்கு என வீட்டில் கூறி வந்த பருத்தித்துறையைச் சேர்ந்த 22வயது யுவதி ஒருவரும் கோண்டாவிலைச் சேர்ந்த இரு இளைஞர்களும் சந்தேகத்திற்கிடமாக உலாவியதையடுத்து அப்பகுதி கிராம சேவையாளருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து குறித்த கிராம சேவையாளரினால் அவர்கள் விசாரிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர்.

இவ்வாறான பல சம்பவங்கள் நிகழ்வதனால் பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளிலும் உல்லாசப் பயணங்களிலும் விழிப்பாக இருக்க வேண்டும் என சுட்டிக் காட்டும் அதேவேளை இதுபோன்ற கலாசார சீரழிவில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (6-246)

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு யுனிசெவ் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு யுனிசெவ் அனுசரணையுடன் வலயக் கல்விப் அலுவலகத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

இதில் கோப்பாய் கோட்டத்திற்குரிய பாடசாலை மாணவர்களுக்கு இவ் உபரகணங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.நல்லூர் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை இவ் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (30)




## உபகரணங்களை பெற்றுக்கொள்ளவும்

(சாவகச்சேரி)

யுனிசெவ் நிறுவனத்தினால் தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் சுற்றுச்சூழலை துப்புரவாகப் பேணுவதற்கான உபகரணங்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பொருட்களை இன்று வெள்ளிக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-4)

## மருத்துவ சேவை

(இருபாலை)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மருதங்கேணிப் பகுதியில் நலன்புரி முகாம்களில் இருக்கும் மக்களின் நலன் கருதி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையினரால் வாரத்தில் ஒரு தடவை மருத்துவ சேவைகள் இடம்பெற்று வருவதால் முகாம் மக்கள் நன்மை அடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-134)

## 'பல்லியம்' இறுவட்டு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)


யாழ்.கல்வி வலய இசையாசிரியர் கழகத்தினால் நடத்தப்படும் ''பல்லியம்'' இறுவட்டு வெளியீட்டு' விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் திருமதி ஞா.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் (சுகாதாரமும் உடற்கல்வியும்) த.குமாரசாமி கலந்துகொள்ளவுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேற்ற வாதம் முதல் காபன் குடியேற்ற வாதம் வரை

## கொப்பனேகன் உச்சிமாநாடு



மேற்கு நாட்டவர் குடியேற்றங்களை ஆபிரிக்கா, தென்னமெரிக்கா, ஆகிய கண்டங்களில் அமைத்த போது அந்நாடுகளின் வளங்களை சூறையாடியும் மக்களின் உழைப்பினை சுரண்டியும் அவர்களை ஒடுக்கியும் தமது நாடுகளின் பொருளாதாரங்களை செழிமைப்படுத்தினார்கள். குடியேற்றவாத சிந்தனை மேற்கூறிய நாடுகளை மிகவும் பின்தங்கி வறிய பொருளாதாரங்களா கவும் ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினை கொண்டவர்களாகவும் மாற்றியதுடன் பல தசாப்த காலங்களாக இந்நாடுகளை தமது குடியேற்றங்களாகவும் ஆண்டு வந்தனர்.

கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் மேற்கு நாடுகள் பொருளாதார ரீதியில் பலம் பொருந்திய நாடுகளாகவும் குடியேற்ற நாடுகள் அவர்களின் சந்தை நாடுகளாகவும் மாற்றமடைந்ததுடன், உலகப் பொருளாதார ஒழுங்கும் மேற்கு நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகள் எனவும் குடியேற்ற நாடுகள் குறைவிருத்திப் பொருளாதாரங்கள் அல்லது வளர்முக நாடுகள் என்ற புதிய ஒழுங்கினை உருவாக்கியதுடன் குடியேற்ற வாதம் புதிய முகம் ஒன்றுடன் தனது வடிவத்தினையும் மாற்றியது.


கைத்தொழில்புரட்சியின் விளைவுகளும் மாற்றங்களும் குடியேற்ற நாடுகளின் பொருளாதாரங்களை அபிவிருத்தி நிலைக்கு கொண்டு செல்லாவிடினும் அச் சமூகங்களின் கைத் தொழில் புரட்சியானது அரசியல், சமூக, கல்வி நிலைகளில் பாதிப்பினை ஏற்படுத்தி குடியேற்றவாதிகளிடமிருந்து விடுதலை பெறுதற்கான தேசிய எழுச்சி – தேசியப் போராட்டங்களுக்கு வழிவகுத்தன. இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவுறும் தறுவாயில் இம் மூன்றாம் மண்டல நாடுகள் குடியேற்ற வாதம் என்ற வலையில் இருந்து விடுபட்டபோதும் அபிவிருத்தி, உதவி, ஆராய்ச்சி, மனித உரிமைகள் என்ற விடயங்களினூடாக நவ காலனித்துவ (Neo coloniyalism) பிடியினுள் மீண்டும் மறை (Undirect) வழியில் இந்த வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களின் ஆதிக்கத்திற்குட்பட்டன.

கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் உலகப் பொருளாதார ஒழுங்கில் வளர்முக நாடுகள் என வகைப்படுத்தப்படும். மூன்றாம் மண்டல நாடுகளில் ஒரு சில நாடுகளைத் தவிர அதாவது புதிய கைத்தொழில் நாடுகள் (NIC) வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் எனப்படும். (Emerging Economics) இந்தியா, சீனா, பிரேசில், ஆர்ஜன்ரீனா என விரல்விட்டு எண்ணக்கூடிய நாடுகளைத் தவிர மற்றைய பொருளாதாரங்கள் இன்னும் வளர்முகப் பொருளாதாரங்களாகவே வகைப்படுத்தப்படுகின்றன. குடியேற்ற வாதமும், நவகுடியேற்ற வாதமும வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களை மேலும் வளர்ச்சியடைந்து பலமான பொருளாதாரங்களாக மாற்ற மூன்றாம் மண்டல வளர்முகப் பொருளாதாரங்கள் வறிய பொருளாதாரங்களாகவே இன்றும் காணப்படுகின்றன.

காலனித்துவ வாதத்தினாலும் நவ காலனித்துவ வாதத்தினாலும் வறிய பொருளாதாரங்களாக இருக்கும் மூன்றாம் உலக நாடுகள் மேற்கு நாடுகளின் கைதத் தொழில் மயமாக்கம் –சந்தை பொருளாதார முறைமை என்ப வற்றினால் மீண்டும் ஒரு குடியேற்ற வாதத் தினை எதிர்நோக்குகின்றன. அது காபன் குடியேற்ற வாதம் எனப்படும்.

### காபன் குடியேற்றவாதம்

உலகின் முன்னணி கைத்தொழில் நாடுகளும் வளர்ந்து வரும் கைத்தொழில் நாடுகளான சீனா, இந்தியா, பிரேசில், இந்தோனேசியா போன்ற நாடுகளும் தமது கைத் தாழில் நடவடிக்கைகளினால் பெருமளவு காபன் டை ஒக்சைட்டினை ($Co_2$) வெளியேற்றி வருகின்றன. இக் காபன் வெளியேற்றமானது மனிதன் வாழக்கூடிய ஒரே கோளான புவியினை பாதித்து வருகின்றது. அதுவும் வளர்ச் சியடைந்த பொருளாதாரங்களால் மேற்கொள் ளப்படும் இந் நடவடிக்கையினால் ஒன்றுமே செய்யாத கெயிட்டி தொடங்கி சூடான் ஊடாக வங்களா தேஷ் ஊடாக வரையுள்ள அப்பாவி குடிமக்கள் பூமியினை மாசடைவதற்கு பங் காளிகளாக இல்லாதபோதும் பணக்கார நாடு




படம் :-1 காபன் வெளியேற்றத்தினால் பூமியின் பனிப்பாலம் உருகி பூமி குளிர் கோளாக (Cool Glope) மாறுவதினை சித்தரிக்கும் பெண்.

களின் காபன் வெளியேற்றத்தினால் ஏழை நாடுகளான இந்நாடுகள் வெள்ளம், வரட்சி, வெப்பம், காலநிலை மாற்றம் போன்றவற்றினால் பாதிக்கப்படுகின்றன.

உலகின் 40% தொழில்கள் காபன் செறிவான தொழில் துறைகளாகவே காணப்படுகின்றன. அவற்றின் உரிமையாளர்களில் பெருமளவானது கைத்தொழில் நாடுகளையே சாரும்.

கைத்தொழில் நாடுகளின் மனித நடவடிக்கைகளினால் வெப்பத்தினை அதிகரிக்கும் காபன் டி ஒக்சைட் வாயுவின் வெளியேற்




உலகின் முன்னணி பச்சை வீட்டு வாயுவினை வெளியிடும் நாடுகள்

றம் மூன்றாம் உலக நாடுகளை மாத்திர மன்றி புவியின் காலநிலையிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் புவி உயிரினம் வாழ்வதற்கு ஏற்ற இடமாக இல்லாது போகும் அபாயமொன்றினை மனித குலம் எதிர்நோக்கியுள்ளது. காலநிலையியலாளர்களும் சூழலியலாளர்களும் கால நிலை மாற்றங்களையும் அதன் தாக்கங்கள் குறித்தும் குறிப்பிட்டு வருகின்றனர்.

### காலநிலை மாற்றமும் அதன் தாக்கங்களும்

ஐக்கிய நாடுகளின் (Intergovernmental Panel on Climate Change (IPCC)) காபன் வெளியேற்றத்தினால் ஏற்படும் காலநிலை மாற்றங்களை உலகின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

காபன்வெளியேற்றத்தினால் (CFC) ஓசோன் படை சிதைவடைந்து வருவதினால் புவியானது வெப்பமடைந்து வருகின்றது. $Co_2$ வெளியீட்டினால் புவியின் வெப்பம் இந் நூற்றாண்டினுள் 2 செல்சியஸ்சினால் அதிகரிக்கும்.

புவி தொடர்ந்து வெப்பமடைந்து வருவதினால் கடலின் நீர் மட்டம் அதிகரித்து வருகின்றது. IPCCயின் அறிக்கையின் படி 1961 ஆம் ஆண்டில் இருந்து கடல் நீர் மட்டம் சராசரியாக வருடத்திற்கு 1.8mm உயர்ந்து வருகின்றது. இது 1991 இல் இருந்து 3.1 mm என்ற வேகத்திற்கு தற்போது வருடத்திற்கு அதிகரித்து வருகின்றது. இவ்வேகத்தில் சென்றால் 2100 ஆம் ஆண்டளவில் இது 18-59 சென்ரி மீற்றர் உயரக் கூடும் என எதிர்வு கூறப்படுகின்றது.


புவி வெப்பமடைதலைத் தொடர்ந்து மலைகளை மூடியிருக்கும் பனிப்பாறைக்ள் (Mountain Glaciers) இரண்டு அரைக் கோளங்களிலும் கடந்த சில தசாப்தங்களாக உருகிவரத் தொடங்கியுள்ளன.

ஆட்டிக் பிரதேச பனி மூடி (Artic Ice Cap) கோடை காலத்தில் இன்னும் 20-30 வருடங்களில் முற்றாக மறைந்து உருகிவிடும்.

அந்தாட்டிக்கா குடாவானது கடந்த ஐம்பது வருடங்களில் 2.5 செல்சியஸ் டிகிரியினால் வெப்பமடைந்து வருகின்றது. இது சராசரி புவிவெப்பமடைதலின் 5 மடங்கு அதிகமாகும். இதனால் கடந்த 20 வருடங்களில் அந்தாட்டிக்கா தனது ஐஸ் படைகளில் 7 படைகளை இழந்துள்ளது. (Ice Shelves) அத்துடன் பாரிய பனிப்பாலங்கள் கடலில் மிதந்து வரும் போகிதம் காணப்படுகின்றது.

கைத்தொழில் நாடுகளின் காபன்குடியேற்றவாதத்தினால் கடலின் நீர் மட்டம் அதிகரிப்பதுடன் புவியின் பல்வேறு உயிர் வாழ் விலங்குகளும் அபாயத்தினை (Endanger Animals) எதிர் நோக்கியுள்ளன. வட கடலில் 36 வகையான மீன் இனங்களில் 20 வகையானவை வடக்கு நோக்கி இடம்பெயர்ந்துள்ளன. குளிர் நீருக்காக 105 வகையான பிரான்ஸின் பறவை இனங்கள் 1989 இக்கும் 2006இற்கும் இடையில் பிரான்ஸின் வடக்குப் பக்கம் 91 கிலோமீற்றர் அப்பால் அவை இடம் பெயர்ந்துள்ளன.

## கடலின் அடியில் கூடிய மாலைதீவு மந்திரி சபை



அலாஸ்கா சைபிரிஸ் பனிப்பாலங்கள் புவி வெப்பமடைந்து உருகி வருவதால் துருவக் கரடிகள் நிலையைக் குறிக்கும் கார்ட்டூன் சித்திரம்

தென் இந்து சமுத்திரத்திலுள்ள கேக் குளியன் Kerguelin தீவு கடந்த 40 வருடங்களில் கடல் நீர் மட்ட உயர்வினால் அதன் 1/5 பகுதி கடலினுள் மூழ்கியுள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர். இமாலய பனிப்பாறைகள் உருகி வருவதால் 1.3 மில்லியன் அதில் இருந்து வழிந்து வரும் நீரில் தங்கியிருப்பவர்கள் பாதிப்படையப் போகின்றனர். வருடத்திற்கு 7மீற்றர் அளவு உயரமான பனிப்பாலம் உருகிவருவதாக அறிக்கைகள் கூறுகின்றன. ஆபிரிக்காவின் கிளிமஞ்சோறா மலையின் பனிப்பாறைகள் இன்னும் 20 வருடங்களில் முற்றாக உருகி விடும் என ஐக்கிய அமெரிக்க புலமையாளர்கள் கூறுகின்றனர்.

மாலைதீவு நாடு 50 வருடங்களில் கடலினுள் மூழ்கும் என எதிர்வு கூறப்படுகின்றது. இதனை உலகிற்கு உணர்த்தும் வகையில் மாலைதீவு அரசாங்கம் தனது மந்திரி சபை கூட்டத் தினை கடலின் அடியில் சமீபத்தில் நடத்திக்காட்டியது.


கீறின்லாந்து ஐஸ்பானம் (Ice Sheet) கடந்த 2000 ஆம் ஆண்டில் இருந்து 1500 மில்லியன் தொன் ஐஸ்பானங்களை இழந்து வருகின்றது. அது மட்டும் 0.75 மில்லி மீற்றர் கடல் நீர் மட்டம் வருடந்தோறும் அதிகரிப்பதற்கு பங்களித்துவருகின்றது. இது போலவே ஆட்டிக் பனிப்பாலங்களும் கடந்த 30 வருடங்களில் 1/3 என்ற அளவில் சுருங்கி விட்டது. சில சூழலியலாளர்களின் கருத்துப்படி கைத்தொழில் நாடுகளால் வெளியிடப்படும் காபன் டி ஒக்சைட்டை சமுத்திரங்கள் உறிஞ்சி வருவதால் கடலின் அசிட் தன்மை (Acidity Of Seas) அதிகரிக்கின்றது. இது கடலின் மழைக்காடுகள் என அழைக்கப்படும். பவளப் பாறைகளையும் நுண் உயிர்களையும் பாதிக்கின்றன என சமுத்திர வியலாளர்கள் கூறுகின்றனர்.

கைத்தொழில் புரட்சியின் ஆரம்பம் முதல் உயிர் பல்வகைமையிலும் பாதிப்புக்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. உணவுச் சங்கிலியில் பலமான தொடர்பினை போறாமினி வெறா (Foraminifera) என அழைக்கப்படும் நுண் உயிர் அங்கியானது தனது நிறையின் மூன்றில் ஒன்று இழந்துவிட்டதாக சமுத்திரவியலாளர்கள் கூறுகின்றனர். கல்சியம் ஓட்டினை பாதுகாப்பாகக் கொண்ட இவ் வகை நுண் உயிர்கள் தென் சமுத்திரங்களில் காணப்படுகின்றன. கடலின் அமிலத் தன்மை அதிகரிப்பதன் எதிர் விளைவு இதுவெனக் கூறுகின்றனர். 150 கடல் விஞ்ஞானிகள் கடந்த ஒரு தசாப்தகாலத்தில் கடலில் அமிலத் தன்மை அதிகரிப்பு உயிர் பல்வகைமையை வெகுவாகப் பாதித்துள்ளது என எச்சரிக்கை செய்கின்றனர். (தொடரும்)

ஏ.சி.ஜோர்ஜ்
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலாமைகளின் அபாய நிலையும் அவற்றின் பாதுகாப்பும்



உலகிலே ஏழு வகையான கடலாமை இனங்கள் ஆட்டிக் பிரதேச (முனைவு) பகுதியை தவிர ஏனைய சமுத்திரங்களில் வாழ்கின்றன. இன்று உலகில் உள்ள எல்லா விலங்கு இனங்களில் கடலாமைகள் மிகவும் ஆபத்தான நிலமையில் உள்ளது. இயற்கை வளத்தை பேணும் சர்வதேச ஒன் றியத்தின் சிவப்புத் தரப்பதிவேட்டின்படி ( Red Data Book of the international Union for the conservation of nature – IUCN) கடலாமைகளின் எல்லா இனங்களும் அச்சுறுத்த லுக்குட்பட்டிருக்கின்றன. இவை அழிவை எதிர் நோக்கி அருகலாகி வருகின்றது. "அழிவு என் பது உலக இயக்கத்தின் ஒரு பகுதி" எனினும் கடலாமையின் அழிவு நியாயமற்ற அழிவு. இதற்கு மிக முக்கிய காரணம் மனிதனே. எனினும் சில இயற்கைத்தடைகளும் அடங்கும்.

கடலாமைகள் இனம்பெருகும் தன்மையை அடைய 15-20 வருடங்கள் ஆகின்றது. இவை அண்ணளவாக 100 வருடங்கள் வாழக்கூடியவை. முதிர்ச்சியடைந்த பெண் ஆமையானது கடல் மட்டத்திற்கு மேல் உள்ள நிலத்தில்



Barbara Harmon

இரவு நேரங்களில்முட்டையிடும். இவை மணற்குவியலில் கூடுகட்டி முட்டைகளை அடை காக்கவிடும். முட்டைகள் 45-75 நாட்களில் பொரித்து இளம் நிலைகளில் கடலுக்கு திரும்பும். ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான ஆமைக்குஞ்சுகள் அவற்றின் கூட்டிலிருந்து வெளியேறுகின்றன. எனினும் 10000 ஆமைக்குஞ்சுகளில் ஆயிரம் மட்டுமே உயிர் வாழுகின்றன.

*கடலாமைகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் அவற்றின் அழிவும்*

கடலாமைகளுக்கு இயற்கைத் தடைகளினால் ஏற்படும் பாதிப்பு மிகக்குறைவானதாகும். முட்டையிலிருந்து விடுபட்ட குஞ்சுகள் சில நாட்களின் பின்னர் கூட்டிலிருந்து முற்றாக வெளியேறும். இவை ஒளியினால் திசைமுகப் படுத்தப்பட்டு கடலினை நோக்கிச் செல்லும். பகலிலே இவை பறவைகளிற்கு இரையாகி விடும். அத்துடன் கூடிய வெப்பம் அவற்றின் இறப்புக்கு காரணமாகின்றது. சில வேளைகளில் கடலினுள் சென்ற ஆமைக்குஞ்சுகளை சுறாக்கள், நண்டுகள் என்பன உணவாக்கிவிடும்.

*கடலாமைகளின் அழிவில் மனிதனின் பங்கு*


மனித எண்ணிக்கை அதிகரிப்பினால் ஏற்படும் கூடிய அழுத்தமானது கடலாமைகளின் உயிர் வாழ்க்கைக்கு மிகப் பெரிய ஆபத்தாகின்றது. கடலாமைகள் கூடுகட்டும் கரையோரங்களிலிருந்தும் குடிபெயரும் பாதைகளிலிருந்தும் உணவுக்காக பிடிக்கப்படுகின்றது. இவற்றின் முட்டைகளும் களவாடப்படுகின்றன. கடலாமைகளின் பகுதிகள் சூப்புக்கும் எண்ணெய்க்கும் அவற்றின் ஓடு அலங்காரத்திற்காகவும் கைப் பணிப்பொருட்கள் பெறப்படுவதற்காகவும் பிடிக்கப்படுகின்றன. கடந்த 100 வருடங்களில் 90 வீதமான Hawskbill கடலாமை குறைவடைந்து விட்டது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இவை மிக அழகான பொன்னிற ஓட்டினை கொண்டது. ஓட்டிற்காகவே இவை கொல்லப்படுகின்றன.

ஒவ்வொரு வருடமும் வளர்ந்த ஆமைகளும் குஞ்சுஆமைகளும் இறால் பிடிக்கும் உபகரணமான இறால் இழுவை (Shrimp Trawler) யில் தவறுதலாக சிக்கி காயப்பட்டு இறக்கின்றன.

முட்டையிடும் ஆமையானது அமைதியான இருண்ட கடற்கரைச் சூழலை நாடி முட்டையிடுகின்றது. இவ்விடங்களை மனித வாழிடங்களாலும் பெருந்தெருக்களினாலும் உல்லாசப் பயணிகளின் வதிவிடத்தொகுதிகளினாலும் கைத்தொழில் சாலைகளினாலும் அபகரிக்கப்படுகின்றன. இவற்றினால் உண்டாகும் இரவு நேர ஒளியில் கடலாமையின் கூடுகட்டும் செயன்முறை குழப்பப்படுகின்றது. ஆகவே இவை பாதுகாப் பற்ற இடங்களிலேயே முட்டையிட நேரிடுகின்றது.

பொரித்த ஆமைக்குஞ்சானது ஒளியினால் திசைமுகப்படுத்தப்பட்டு கடலை நோக்கிச் செல்கின்றது. இவை இரவு நேர விளக்குகளினால் கவரப்பட்டு கடலை நோக்கிச் செல்லாமல் பெருந்தெருக்களில் சென்று வாகனங்களில் நசுக்கப்பட்டு இறக்கின்றன. சில வேளைகளில் நீரிழப்பு ஏற்பட்டு இறக்கும் அல்லது இரை கௌவியினால் கொல்லப்படுகின்றன.

கடற்கரைகளில் மனித நடமாட்டம் மிகையாக இருப்பது பெண் கடலாமைக்கு இடைபூறாக காணப்படும். அத்துடன் நிழற்குடைகள்,



வள்ளங்கள், கதிரைகள் போன்றன கூடுகட்டும் இடங்களின் அமைப்பை மாற்றுகின்றது. உல்லாசப்பிரயாணிகளினால் கூட்டிக்கொண்டுவரப்படும் செல்லப்பிராணி (நாய்,பூனை) களினால் ஆமைக் குஞ்சும் முட்டைகளும் உண்ணப்படுகின்றன.

வாகனங்களை கடற்கரைவழியே ஓட்டிச் செல்லல் முட்டைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துவதால் ஆமைக்குஞ்சு பொரிக்கும் வீதம் குறைவடைகின்றது.

இயற்கை அனர்த்தத்திற்காக கடற்கரைகளிலே கடற்சுவர் கட்டப்படுதல், கடலரிப்பினால் ஏற்பட்ட பாதிப்பினை ஈடுசெய்ய மிகையான மணலினால் கரையானது நிரப்பப்படுதல் போன்ற செயற்பாடானது இயற்கையான கடற்கரை அமைப்பினை மாற்றுகின்றது. இதன் காரணமாக முட்டையிடல் கூடுகட்டல் செயற்பாடு பாதிப்படைகின்றது.

பெருமளவான பிளாஸ்ரிக் பொருட்கள் தரையிலிருந்து கடலிற்கு செல்கின்றது. இதனால் 100 மில்லியன் கடல் விலங்குகள் ஒவ்வொரு வருடமும் இறக்கின்[illegible]திற்கு மேற்பட்



கடலாமைகள் பிளாஸ்ரிக் பையினை தமது உணவான இழுது மீன் ( Jelly Fish) என தப்பபிப்பிராயப்பட்டு உட்கொண்டு இரைப்பையில் அவை சமிபாடடையாமல் இறக்கின்றன. இவை அதிகளவில் படகுகளில் பயணம் செய்யும் மக்களினால் கவலையீனமாக வீசப்படுகின்றன.

எண்ணெய்க்கசிவு, வீடமைப்புகளின் கழிவுநீர், வளமாக்கிகள், இரசாயனப்பொருட்கள், பெற்றோல் கழிவு என்பன கடல் நீரினைச் சென்றடைவதனால் கடல்நீர் மாசாகின்றது. இவை கடலாமைகளை மட்டுமன்றி அவற்றின் உணவுகளையும் (கடற்தாவர விலங்கு) சென்றடைந்து அவற்றின் உடலில் தேங்குகின்றது. இறுதியில் இவ் உணவுகளை உட்கொண்ட ஆமைகள் நோய்வாய்ப்பட்டு இறக்கின்றன.

மனித நடவடிக்கையின் விளைவாக பூகோள வெப்பநிலை அதிகரிப்பதனால் முனைவுப்பகுதியில் பனிக்கட்டி உருகி கடற்கரை நீரினுள் மூழ்கும் அபாயம் ஏற்படும். இதன் காரணமாக கடலாமைகளின் முட்டையிடல் கூடுகட்டல் செயற்பாடு பாதிப்படைகின்றது. அத்துடன் உயர் வெப்பநிலையானது பால் நிர்ணயத்தின் விகிதத்தினை மாற்றுகின்றது. அதாவது பெண் ஆமை பொரிக்கும் தகவு ஆண் ஆமையிலும் பார்க்க அதிகம். இதனால் பிறப்புரிமை பல்வகைமையில் மாற்றம் ஏற்பட்டு இனம்பெருகும் சந்தர்ப்பமும் குறைவடையும்.

இவ்வாறாக பல வழிகளினால் மனிதனால் கடலாமைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. எனவே அவற்றை பாதுகாப்பது எமது கடமையாகும். 1970 ஆம் ஆண்டிலிருந்து கடலாமை பாதுகாப்பு திட்டம் ஆரம்பமானது.

*கடலாமைப் பாதுகாப்பு திட்டம்*

கடலாமைகளை பிடிப்பதோ விற்றலோ அதன் பாகங்களை கடத்தலோ சட்டப்படி குற்றமாகும்.

மக்களிடையே இயற்கை வளங்கள் பற்றியதான விழிப்புணர்வை ஏற்படுத்தி கடலாமைகளை பாதுகாத்தல் அவசியமாகின்றது.

அவற்றுள் ஒன்று இறால் இழுவையை (Shrimp Trawler) பாவிப்பதற்கு பதிலாக கடலாமைகளை வெளியேற்றும் உபகரணம் **(Turtle Excluder Device).** இதனைப் பாவிப்பதற்கு மீனவர்களை ஊக்கப்படுத்தல் வேண்டும். இந்த உப கரணமானது ஒரு சட்டத்தினாலான துளையினை அடியிலும் நுனியிலும் கொண்டுள்ளது. இவற்றினூடு சிறிய இறால் போன்ற கடல் உயிரினங்கள் உள்ளிழுக்கப்பட்டு வலையினுள் பிடிக்கப்படுகின்றன. ஆனால் கடலாமைகள் இச்சட்டத்தினூடு வெளியேற்றப்படுகின்றது.

**திருமதி சுதர்சினி சத்தியரூபன்**
செயன்முறை காட்டுனர்,
மீன்பிடியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**முட்டையிடும் கூடுகட்டும் கடற்கரைப் பிரதேசங்களை பாதுகாத்தல்.**

செயற்கையான ஒளியினை இரவு நேரங்களில் குறைத்தல், கடற்கரைப்பகுதியில் யன்னல்களை ஒளி தெரியாதவாறு மூடிவிடுதல், இரவு நேரங்களில் கடற்கரைகளில் தீமூட்டுதலைத்தவிர்த்தல் (ஏனெனில் ஆமைக்குஞ்சுகள் சிலவேளைகளில் இத்தீவெளிச்சத்தினால் கவரப்பட்டு இறக்க நேரிடலாம்.) கடற்கரையோரங்களில் இயற்கை வெளிச்சத்தை பாவித்தல், அமைதியைப் பேணல், நிழற்குடைகள், கதிரைகள் போன்றன பாவிப்பதை குறைத்தல்

கடற்கரை அருகே குப்பைகள் கொட்டுவதை சட்டப்படி தவிர்த்தல், கடற்கரை நிகழ்வுகளின் போது பலூன் விடுவித்தலை தவிர்த்தல், கடற்கரையோர மரங்களை பாதுகாத்தல் (இதன் மூலம் கடலரிப்பினை தவிர்க்கலாம்.) போன்ற செயன்முறைகளின் மூலம் முட்டையிடும் கூடுகட்டும் கடற்கரைப் பிரதேசங்களைப் பாதுகாக்கலாம்.

கடலாமைகளின் வளர்ப்பு மிகவும் வெற்றிகரமாக உலகின் சில . பாகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எதிர் காலத்தில் இந்தத்திட்டம் மிகவும் பிரபல்யமாகப் பரவும் என கருதப்படுகின்றது. இவ்வாறான வளர்ப்பு கடலாமைகள் பிடிப்பதற்காக பிரயோகிக்கப்படும் அழுத்தத்தைக்குறைக்கவும் செய்யும். அத்துடன் பாதுகாப்புச் சட்டங்களை அமுல்படுத்துவதுடன் கடலாமைகள் வளரும் இயற்கைப்பாதுாப்பு இடங்களை ஸ்தாபிப்பதும் மிகவும் விரும்பத்தக்கது. உலக இயக்கத்தில் உயிர் பல்வகைமை பாதுகாப்பதுடன் உச்ச பயனை அடைவதற்கு நாம கடலாமைகளை பாதுகாப்போம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 14

**பாம்புகள் தரையில் ஊர்ந்து செல்வதற்கு பயன்படுத்தும் அங்கம் எது?**

**விடைகளை 18-02-2010 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப**

**வேண்டிய முகவரி:**
Mr. V. Sendil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna. Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப்பணப் பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மீன்பிடியல் துறையில் கலாநிதி சி. குகநாதனிடம் (தலைவர் பிரவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைகழகம்.

**புதிர் 12க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
வினுஷா செல்வராஜா
வட்டு வடக்கு,
சித்தங்கேணி.

**புதிர் 13 இற்கான விடை : நீலத்திமிங்கிலம்**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 14

சரியான விடை :........................................
முழுப்பெயர் :........................................
முகவரி :........................................
:........................................
கையொப்பம் :........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைக்கு மேல் பறவை பறப்பதை உன்னால் தடுக்க முடியாது. ஆனால் அது உன் தலையில் கூடுகட்டுவதை தடுக்க முடியும். - அமெரிக்கா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## உள்ளூராட்சி சபைகளின் சட்டங்கள் யாழ்ப்பாணத்தில் அமுலில் உள்ளதா?

ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் நாள் தோறும் ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்த வண்ணம் உள்ளனர்.

யாழ்ப்பாண மக்கள் தங்களின் சொந்த இடங்களைப் பார்ப்பதற்குக் கூட உரிமையின்றி அகதி முகாம்களிலும் வாடகை வீடுகளிலும் காலம் கழிக்கும் போது சிங்கள மக்கள் யாழ்ப் பாணத்தை நோக்கிப் படையெடுப்பது எதற்கான தென்ற கேள்வி எழுவே செய்கின்றது.

ஏதோ! நாங்கள் காட்சிப் பொருட்கள். அவர்கள் ரசிகர்கள் எங்களையும் எங்கள் வாழ்விடங் களையும் வந்து பார்த்து விட்டுச் செல்லட்டும் எல்லாம் முடிந்த பின்னர் - எங்கள் இருப்பு- வாழ்வு - உரிமை அத்தனையும் உறங்கிப் போன பின்பு வந்தால் என்ன? போனால் என்ன? என்ற மனநிலையே யாழ்ப்பாண மக்களிடம் உள்ளது.

இருந்தும் சிலவற்றை குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். அதாவது இலங்கையில் யுத்தம் முடிவுற்றது உண்மையாயினும், சட்டங்கள், தேச வழமைகள் அழிந்து போகவில்லை.

எனினும் யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய உள்ளூராட்சி சபைகள், சட்டம், ஒழுங்கு, நீதி எல் லாம் வழக்கொழிந்து போனது போல நடந்து கொள்கின்றன.

குறிப்பாக நல்லூர்க் கந்தனின் ஆலயச் சூழ லைப் பார்க்கும் போது அங்கு தெருவோர வியா பாரம் களைகட்டியுள்ளது.

நீண்டகாலம் இந்நிலை தொடருமாயின் அங்கு ஆட்சி உரிமை ஏற்படக்கூடிய வாய்ப்பு உருவாகும்.

அதே நேரம் நல்லூர் முருகனின் மகோற்சவ காலத்தில் நல்லூர் சுற்றுவட்டத்தில் வியாபாரம் செய்த தமிழ் மக்கள் அந்த இடங்களை மீளப் பெறமுடியாத நிலை உருவாகும்.

எனவே நல்லூர் மகோற்சவ காலத்தில் மகோற்சவ கால கடைகளை அமைப்பதில் பிரச் சினை உருவாகும் என்ற உண்மையை முன் கூட்டியே உணர வேண்டும்.

இதேபோல் மரக்கறி விற்பனைகளும் அங்கீ கரிக்கப்பட்ட சந்தைகளில் இருந்து விலகி நினைத்த இடங்களில் நடைபெறுகின்றன.

இந்நிலைமை தொடருமாயின் யாழ்ப்பாணம் மற்றும் திருநெல்வேலி மரக்கறிச் சந்தைகள் செயலிழக்கவும் அவற்றை குத்தகைக்கு எடுத்த வர்கள் நட்டமடையவும் வாய்ப்பு உண்டு.

இந்நிலை யாழ்ப்பாண உள்ளூராட்சி சபைக ளின் வருமான மூலங்களை இல்லா தொழித்து விடும்.

எனவே இந்த உண்மைகளை உணர்ந்து உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

### செங்கல்பட்டு முகாமில் உள்ள

# இலங்கை அகதிகள் 15 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைப்பு

(சென்னை)

செங்கல் பட்டு அகதிகள் சிறப்பு முகாமில் பொலிஸாரைக் காப்பாற்றச் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் தாக்கப்பட்ட சம் பவம் தொடர்பாக 15 இலங்கை அகதிகள் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

செங்கல்பட்டில் உள்ள இலங்கை அகதிகள் சிறப்பு முகா மில் 33 அகதிகள் தங்கியுள்ளனர். அவர்களில் முகமது நிக் சன், சேகர்,ரமணா ஆகிய 3 அகதிகள் தங்களை விடுதலை செய்யக் கோரி அங்குள்ள மரத்தின் மீது ஏறி அமர்ந்து போராட் டம் நடத்தினார்கள்.

இது பற்றி தகவல் கிடைத்ததும் பொலிஸ் மேலதிகாரி சேவியர் தன்ராஜ்,செங்கல்பட்டு நகர இன்ஸ்பெக்டர் ஆல்பிரட் வில்சன், கியூபிரிவு இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜ் ஆகியோர் அங்கு சென்று சமரசம் செய்ததை தொடர்ந்து ஒவ்வொரு வரு வராக கீழே இறங்கினார்கள். இந்த போராட்டம் சுமார் 7 மணி நேரம் நீடித்தது.

இதனை அடுத்து முகாமில் பாதுகாப்புக்காக நின்று கொண் டிருந்த பொலிஸாரை 15 அகதிகள் தங்களது அறைக்குள் தள்ளி மூன்று பூட்டுகளை போட்டு பூட்டினர். பொலிஸார் எவ் வளவு சொல்லியும் அகதிகள் அவர்களை திறந்து விட மறுத்து விட்டனர்.


எனவே அறையில் சிக்கிக்கொண்ட பொலிஸாரை காப் பாற்றுவதற்காக இன்ஸ்பெக்டர் ஆல்பிரட் வில்சன் , முனி யாண்டி உள்ளிட்ட பொலிஸார் ஏணி வழியாக அந்த அறைக் குள் நுழைந்தனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த அகதிகள் அப்பொலிஸ் அதி காரிகளை சரமாரியாக தாக்கினர். இதனால் அவர்கள் இரு வரும் சிகிச்சைக்காக செங்கல் பட்டு அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸாரைத்தாக் கியதாக பத்மராஜன் ,கிருஸ்ண நிதின், முகமது நிக்சன், கிரிதாஸ், அமலன்,மோகன், அருள்,கங்கா தரன்,பரமேஸ் வரன், சேகர் ,வசிதரன், செல்வகுமார், பாரதிதா சன்,ரமணன் ,பிரதீபன் ஆகிய 15 அகதிகள் மீது 5 சட்டப்பிரி வுகளின் கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து அவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

15 பேரையும் நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்க நீதிபதி உத்தர விட்டார். அதன் படி பொலிஸார் அவர்களை வேலூர் சிறை யில் அடைத்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து செங்கல் பட்டு அகதிகள் சிறப்பு முகாமில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட் டுள்ளது. (6)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வீடுகளில் இலட்சுமி கடாட்சம் பெருக

அதிகாலையில் எழுந்ததும் கொல்லைப்புற வாசலைத் திறந்து வைத்து, அதன் பின் தலைவாசலைத் திறக்கவேண்டும் எழுந்ததும் பசுவின் முகத்தில் விழித்தல் நல்லது.

செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் குத்து விளக்கில் ஐந்து முகமும் தீபம் ஏற்றலாம். வீட்டுக்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள் , குங்குமம் ,தண்ணீர் கொடுக்க வேண்டும். மஞ்சள் கிழங்கு கொடுப்ப தால் பல ஜென்மங்களில் செய்த பாவம் விலகி பாக்கியங்களும் பொருளும் சந்தோஷமும் பெருகும்.

பௌர்ணமியன்று மாலையில் குளித்து , சத்யநாராயணரை துளசி , செண்பக மலர்களால் அர்ச்சித்து பால் பாயாசம் , கற்கண்டு ,பழவகைகள் நைவேத்தியம் செய்து வணங்கிய பின்னரே இரவு உணவு உட்கொள்ள வேண்டும்.

## வெள்ளி நற்சிந்தனை

# பக்தியின் மொழி தமிழ் 109

உறவு என்பது மனித வாழ்வியலில் ஓர் உன்னதமான தொடர்பாகும். ஒரு மனிதன் தனித்தவன் அல்ல என்பதை உணர்த்துவதும் அதுவே. எம்மை உறவுகளோடு பிணைத்து வாழும் போது உள்ளம் களிப்படைகிறது. உடல் நலமடை கிறது. எமது செயற்பாடுகளில் செம்மை உண்டாகிறது. ஆனால் இத்தகைய உறவுகளைப் பிரிய நேர்ந்தால் மனம் பெரிதும் துன்பப்படுகிறது. சோர்வுற்று வாழ்க்கையே வெறுக் கிறது. உள்ளம் உடைந்துபோக உடல் நலம் கெடச் செயற் பாடுகள் செம்மை குன்ற வாழ்க்கையே சீர்குலைந்து விடு கிறது.

இவ்வாறு வாழ்வு சீர்குலையச் சமுகக்கட்டுக்கோப்பும் தளர்வடைகிறது மனிதனின் மேம்பட்ட அறிவான பகுத் தறிவும் பயனற்றுப் போகிறது. உலகத்து நடப்புகள் எல்லாம் இயக்கமற்றுப் போகும். ஓர் அவல நிலை உருவாக இட முண்டாகிவிடும். எனவே அந்நிலை உருவாகாமல் தடுக்க எமது முன்னோர் நல்லதொரு வழியைச் சமைத்து வைத் துள்ளனர். அதுவே பக்திநெறி ,என்னும் புதி ய வழியாகும். எமக்கெல்லாம் ஒரு நிலையான உறவாக இறைவன் எப் போதும் எம்முடன் இருக்கிறார் என்ற ஒரு நினைப்போடு வாழும் முறைமையைப் பயிற்றிச் சென்றுள்ளனர்.

இறைவனை நாம் விரும்பும் மனித உறவு நிலையிலே காணும் மனப்பக்குவத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண் டும். நாயன்மார்களின் வாழ்வியலில் இத்தகைய மனப் பயிற் சியை நாம் காண்பதற்கு இன்று அவர்கள் பாடிய பாடல்கள் சான்றாயுள்ளன. சுந்தரரது பாடல் ஒன்று இத்தகைய உறவு நிலையை உணரவைக்கிறது. இறைவனின் அருள் நிறத்தை நன்குணர்ந்த சுந்தரர் அதனை எல்லோரும் அறிய வேண் டும் என எண்ணினார். தம்முடைய திருக்கடைக் கண்ணின் நோக்கினாலே ஏழு உலகத்தையும் காக்கும் ஆற்றல் படைத்த இறைவனை நாம் விரும்பும் உறவிலே காணமுடியும் எனக் காட்டுகிறார். பாடலின் பண்ணாக இறைவன் இருப்பதை எடுத்துக்கூறுகிறார். பண்ணைப்பாடும் தமிழாய் அவனே இருப்பதையும் உணர்த்துகிறார். உணர்வை வெளிப்படுத்த ஒரு மொழி இன்றியமையாகாதது. எனவே தமிழால் இறை வனிடம் எம் உணர்வுகளை வெளிப்படுத்தி வழிபட்டுப் பயன் பெறலாம் என்பதைத் தமது பாடலிலே மிகத் தெளிவாக விளக் கியுள்ளார்.

உறவு நிலையில் இறைவனைக் காண்பதற்கு அவன் உறையும் திருத்தலத்திற்குச் செல்ல வேண்டும். சுந்தரர் பாடல் இறைவன் திருத்தலத்திற்கு எம்மை அழைத்துச் செல்கிறது. உள்ளே செல்வதற்கு முன்னே புறச்சூழலைச் சுட்டி காட்டுகி றது. மண்ணிலே வளமான பகுதியில் பூம்பொழில்கள் நிறைந் திருக்கும் அழகான இயற்கைச் சூழல் திருமழபாடி என்னும் திருத்தலம் வெம்மையற்ற தன்மையான இயற்கைச் சூழல். அந்த அழகான இயற்கைச் சூழலிலே மாணிக்கம் போல ஒளி வீசிக்கொண்டு இறைவன் திருத்தோற்றம் எழுந்தருளி இருக்கின்றது. நவரத்தினங்களிலே சிறந்த மாணிக்கத்தைச் சுந்தரர் திருமழபாடியிலே காண்கிறார். அவருடைய மனத் திலே இறைவன் தோற்றம் ஒரு புதிய உருவாகத் தெரிகிறது. உடன்பிறப்பின் உருவமாய்ச் சுந்தரர் இறைவனைக் காண் கிறார். அதனால் இறைவன் திருவுருவைக் கண்டவுன் "அண்ணா" என்றழைத்து வணங்குகிறார். உடன்பிறப்பு என்று ஒருவர் எமக்கிருப்பது ஒரு பலம் ஆகும். எனவே சுந்தரரும் "அண்ணா" நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே எனப் பாடியுள்ளார். அப்பாடல் எம்மையும் இறைவனை எமது உடன்பிறப்பாய் நினைத்து வணங்கி வாழ்வதற்கு வழி காட்டு கிறது.

"கண்ணாயேழலகுங் கருத்தாய வருத்தமுமாய்ப்
பண்ணாய் நின்ற தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லாவினி யாரை நினைக்கேனே"

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுதந்திர தினத்தை முன்னிட்டு

# யாழ். சிறைச்சாலையிலிருந்து 34 சிறைக்கைதிகள் விடுதலை





(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 62 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலையில் இருந்து 34 சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் இருந்து சிறுகுற்றம் புரிந்தவர்கள், தண்டப்பணம் செலுத்தாதவர்கள் என்ற அடிப்படையில் 26 ஆண் கைதிகளும் 5 பெண் கைதிகளும் காங்கேசன்துறை வேலை முகாம், பலாலி விவசாய முகாம்கள் ஆகியவற்றில் இருந்து 3 சிங்களக் கைதிகளும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். (6-7)

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

கொழும்புத்துறைப் பகுதியிலுள்ள கிணறொன்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மார்க்கண்டு சிவராசா (வயது 34) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். அதிகாலை வேளை இவரைக் காணாத நிலையில் தேடியபோது அவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.நீதிவான் மேற்கொண்டதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

## யாழ். மாநகரசபையின் சுதந்திர தின நிகழ்வு

யாழ்.மாநகரசபையின் சுதந்திர தின நிகழ்வு நேற்று காலை 8.50 மணியளவில் மாநகரசபை வளாக முன்றலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தேசியக் கொடி ஏற்றிவைத்ததுடன் மாநகரசபை ஆணையாளர், மாநகரசபை ஊழியர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். (6-30)

## சந்நிதியில் முதல் தடவையாக ஒரே நாளில் 24 திருமணங்கள்

(வடமராட்சி கிழக்கு)

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்று முன்தினம் மட்டும் 24 திருமணங்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சியின் பல பகுதிகளிலிருந்தும் திருமண நிகழ்வுகளுக்காக வந்த மக்களால் பகல் 11 மணி முதல் 12.30 மணிவரை ஆலய சுற்றாடல் நிரம்பி வழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கூடுதலான திருமணங்கள் நடைபெற்றமை இதுவே முதற் தடவையாகும் என ஆலய பிரதம குரு சின்னத்தம்பிக் குருக்கள் தெரிவித்துள்ளார். (6-4-99)

## எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு ஜனாதிபதி பூரண பொதுமன்னிப்பு வழங்க திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பூரண பொதுமன்னிப்பு வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தண்டனைக்கு மன்னிப்பு வழங்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஹபராதுவ பிரதேசத்தில் நடைபெற்ற விளைச்சல் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உச்ச நீதிமன்றத்தை அவமானப்படுத்திய குற்றத்திற்காக எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு தண்டனை வழங்கப்பட்டது.

தண்டனைக் காலத்தை முழுமையாக அனுபவிக்காத நிலையில் ஜனாதிபதியினால் அவருக்கு ஏற்கனவே விடுதலை வழங்கப்பட்டுள்ளது.

எனினும், இதுவரையில் பூரண மன்னிப்பு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விரைவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பூரண மன்னிப்பு வழங்கப்படும் எனவும், இதுதொடர்பான அறிவிப்பு விரைவில் நீதி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)


31ஆம் நாள் நினைவு அஞ்சலி

நன்றி நவிலல்

தோற்றம் 10 ❖ 01 ❖ 1924

மறைவு 06 ❖ 01 ❖ 2010



அமரர் திருவேங்கடம் வேலுப்பிள்ளை

வல்வெட்டித்துறை

(வல்வெட்டித்துறை சிவன் கோவில் பிரதம தர்மகர்த்தா, இளைப்பாறிய மாவட்ட காணி உத்தியோகத்தர்)

*பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், மனோகரன் (டென்மார்க்), திருமதி ஜெகதீஸ்வரி மதியாபரணம் (தமிழ்நாடு), திருமதி வினோதினி இராஜேந்திரன் (கனடா), பிரபாகரன் (தலைவர், தமிழீழ விடுதலைப்புலிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையாருமாகிய திருவேங்கடம் வேலுப்பிள்ளை 01.06.2010இல் பனாகொடை இராணுவத் தடுப்பு முகாமில் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10.01.2010இல் வல்வெட்டித்துறையில் நடைபெற்றது. இதில் நேரடியாக அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 05.02.2010 இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை வீட்டில் நடைபெற்று காலை 7 மணிக்கு வல்வெட்டித்துறை ஊறணி தீர்த்தக் கடற்கரையில் அஸ்தி கரைக்கப்படும். வீட்டில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

*குடும்பத்தினர்.*

(567)

தகவல்–
எம்.கே.சிவாஜிலிங்கம்
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்.
தொலைபேசி: 0777-729020


## சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்துமுகமாக சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் டெங்கு சம்பந்தமான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மக்கள் மத்தியின் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி அனுசரணையுடன் சொண்ட் நிறுவனத்தினரால் யாழ்.மாநகரசபை பகுதியிலுள்ள சகல இடங்கள் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் ஆட்டோவில் ஒலி பெருக்கி மூலமான விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டும் கிறிஸ்த உதவி நிறுவுனத்தின் நிதி அனுசரணையில் விழிப்புணர்வு பதாகைகளையும் முக்கிய இடங்களில் கட்டியும் இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-30)

## தெலுங்கானா அமைத்தால் தற்கொலை செய்வேன்

### என்.டி.ராமராவ் மனைவி மிரட்டல்

ஆந்திராவை பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைக்கக்கோரி கடந்த 2 மாதமாக தொடர் போராட்டம் நடந்து வருகிறது. இதையடுத்து மத்திய அரசு தனி மாநிலம் அமைப்பது பற்றி ஆராய நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் 5 பேர் கொண்ட நிபுணர் குழுவை அமைத்தது.


இதற்கு மறைந்த ஆந்திர முன்னாள் முதல்வர் என்.டி.ராமராவின் மனைவி லட்சுமி பார்வதி கண்டனம் தெரிவித்தார். இதுபற்றி அவர் கூறியதாவது,

எனது கணவர் உயிருடன் இருந்தபோது ஆந்திராவை நல்ல வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றார். ஆந்திரா ஒருங்கிணைந்த மாநிலமாக இருப்பதுதான் நல்லது. இதைப் பிரித்தால் வளர்ச்சி கடுமையாகப் பாதிக்கப்படும்.

ஒருவேளை மத்திய அரசு ஆந்திராவை பிரித்தால் நான் தற்கொலை செய்துகொள்வேன். தெலுங்கானா மாநிலத்திற்காக அமைக்கப்பட்ட நிபுணர் குழுவினர் பொது மக்களிடம் தான் கருத்துக் கேட்க வேண்டும். ஆந்திர மக்கள் யாரும் தனி தெலுங்கானாவை விரும்ப வில்லை என்றார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக குறுந்தூர நட்சத்திரம் போல்ட் 400 மீ. ஓட்டத்தில் பங்கேற்க முடிவு




(ஜமெக்கா)

உலக குறுந்தூர ஓட்ட நட்சத்திரமாக வர்ணிக்கப்படும் ஜமெக்காவின் உசைன் போல்ட் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்கத் தீர்மானித்துள்ளார்.

ஜமெக்காவில் இந்த மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் போல்ட் பங்கேற்பார் என தெரிவிக்கப்படுகிறது.

பருவ காலத்தை ஆரம்பிக்கும் நோக்கில் போல்ட் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்கத் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வழமையாக பயிற்சிகளை ஆரம்பிக்கும் வகையில் போல்ட் 100, 200 மீற்றர் தவிர்ந்த நீண்ட தூர ஓட்டப் போட்டியில் போல்ட் பங்கேற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நியூயோர்க்கில் நடைபெறவுள்ள டயமன்ட் மெய்வல்லுநர் போட்டியில் 100 மீற்றர் போட்டியில் கலந்து கொள்ளப் போவதாக போல்ட் அறிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டில் மிகச் சிறந்த திறமைகளை வெளிப்படுத்த உத்தேசித்துள்ளதாகவும் போல்ட் குறிப்பிட்டுள்ளார்.

உசைன் போல்ட் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் உலக சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். தொடரில் விளையாடும் ஆஸி. வீரர்களுக்கு எச்சரிக்கை

(மெல்பேர்ன்)

இந்தியாவில் ஐ.பி.எல். போட்டியில் விளையாட உள்ள அவுஸ்திரேலிய வீரர்கள் போட்டிக்காலத்தில் தனியே ஹோட்டல்களை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் இந்திய மாணவர் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.பி.எல். தொடரில் அவுஸ்திரேலிய வீரர்களை விளையாட அனுமதிக்க மாட்டோம் என்று சிவசேனா கட்சி மிரட்டல் விடுத்துள்ளது.

மும்பையில் நடைபெறும் போட்டியின் போது அவுஸ்திரேலிய வீரர்களை அனுமதிக்க மாட்டோம் என்று அக்கட்சி திட்டவட்டமாக கூறியுள்ளது. எனினும் அவுஸ்திரேலிய வீரர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்று உள்துறை அமைச்சகம் உறுதியளித்துள்ளது.

இந் நிலையில் அவுஸ்திரேலிய பாதுகாப்பு நிபுணர் இந்தியாவில் ஐ.பி.எல். போட்டித்தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளார்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்திகரமாக இருப்பதாக அவர் கூறியுள்ளார். எனினும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அவுஸ்திரேலிய வீரர்கள் ஹோட்டல்களில் இருந்து தனியாக வெளியே செல்ல வேண்டாம் என்றும், வெளியே செல்லும் போதும் அவுஸ்திரேலிய வீரர்கள் என்று அடையாளம் காட்டக் கூடிய உடை அல்லது அணியின் சீருடையை அணிந்து செல்லவேண்டாம் என்றும் அவர் ஆலோசனை கூறியுள்ளார்.

இதேபோன்ற ஆலோசனை இந்தியாவில் வந்து விளையாட உள்ள அவுஸ்திரேலிய ஹொக்கி வீரர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அவுஸ்திரேலிய வீரர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்தும் விரிவான ஆலோசனைகள் அளிக்கப் பட்டுள்ளன.

# இந்திய அணியின் பயிற்சியாளராக கிறிஸ்டன் ஒரு வருடத்திற்கு நீடிப்பு

(சென்னை)

பயிற்சியாளர் கிறிஸ்டனின் பதவிக் காலத்தை மேலும் ஒரு ஆண்டுக்கு நீடிப்பு செய்ய இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) முடிவு செய்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக கிறிஸ்டன் உள்ளார். இவரது பதவிக் காலம் வரும் மார்ச் மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. இதையடுத்து தென்னாபிரிக்க தொடருடன் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகி விடுவார் என்று கூறப்பட்டது. தென்னாபிரிக்க அணிக்கு பயிற்சியாளராக செல்ல உள்ளார்என்றும் பத்திரிகையில் செய்திகள் வெளியானது.

ஆனால் கிறிஸ்டனின் பதவிக்காலம் மேலும் ஒரு ஆண்டுக்கு நீடிக்கப்பட உள்ளது. இது குறித்து பி.சி. சி.ஐ. தலைவர் சஷான்க் மனோகர் கூறுகையில்,

பயிற்சியாளர் பதவியில் கிறிஸ்டன் இன்னும் சிறிது காலத்துக்கு தொடர்வார். இதனால் இவரது ஒப்பந்தத்தை நீடிக்க உள்ளோம் என்றார். சஷான்க் மனோகரின் இந்த அறிவிப்பை அடுத்து எதிர்வரும் 2011 உலக கோப்பை தொடர்வரை அணியின் பயிற்சியாளராக கிறிஸ்டன் இருப்பார் எனத் தெரிகிறது.

இது குறித்து கிறிஸ்டன் கூறுகையில், தென்



னாபிரிக்க அணியின் தற்காலிக பயிற்சியாளராக வான் ஜில் நியமிக்கப்பட்டுள்ளது குறித்து எதுவும் எனக்குத் தெரியாது. ஏனெனில் நான் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையுடன் தொடர்பு கொள்வதில்லை என்றார்.

# இந்திய கிரிக்கெட் அணியில் யாரும் பிளவுபடவில்லை

## வீரேந்திர சேவாக் தெரிவிப்பு

(மும்பை)

இந்திய அணியில் அனைவரும் ஒற்றுமையுடன் உள்ளனர். யாருக்கும் யாருடன் கருத்து வேறுபாடு இல்லை. ஒவ்வொரு வீரர்களும் மற்ற வீரர்களின் சாதனையை எண்ணி பெருமைப் படுகிறார்கள். இந்திய அணியில் பிளவு இருப்பதாக ஊடகங்கள் தான் ஊகத்தின் அடிப்படையில் தெரிவிக்கின்றன என இந்திய அணி வீரர் சேவாக் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் பங்களாதேஷத்திற்கு சுற்றுப்பயணம் செய்து 3 நாடுகள் கொண்ட ஒருநாள் போட்டி மற்றும் 2 டெஸ்டில் விளையாடியது. 2ஆவது டெஸ்ட் போட்டியில் அமித் மிஸ்ரா நீக்கப்பட்டது தொடர்பாக அணித் தலைவர் தோனிக்கும் துணை அணித்தலைவர் சேவாக்கிற்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும் இந்திய அணியில் பிளவு இருப்பதாகவும் செய்திகள் வெளியாகி இருந்தன. அணியில் தோனி குழுவினர் சேவாக் குழுவினர் என்று இரு பிரிவாக இருப்பதாகவும் அந்த தகவல் தெரிவித்தன.

இதை சுழற்பந்து வீரர் ஹர்பஜன்சிங் சமீபத்தில் மறுத்து இருந்தார். இந்த நிலையில் இந்திய அணியில் பிளவு எதுவும் இல்லை என்று அதிரடி துடுப்பாட்டக்காரர் சேவாக் மறுத்துள்ளார்.

இருபது-20 உலக கோப்பையின் போது தோனிக்கும் சேவாக்கிற்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக தகவல் வெளியானது. இதை தோனி மறுத்து இருந்தார். தற்போது சேவாக் மறுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 24 பதக்கங்களுடன் இலங்கை நான்காமிடத்தில்

(டாக்கா)

11ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் நடைபெற்று வருகின்றது.

இதில் இலங்கை 24 பதக்கங்களுடன் நான்காமிடத்திற்கு பின்னடைவைக் கண்டுள்ளது. போட்டியின் 5 நாட்கள் முடிபடைந்த நிலையில் இலங்கை இரண்டாமிடத்தில் இருந்து மூன்றாமிடத்திற்கும் மூன்றாமிடத்திலிருந்து நான்காமிடத்திற்கும் பின்தள்ளப்பட்டுள்ளதோடு நான்காமிடத்திலிருந்த பங்களாதேஷ் மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

இதேவேளை நான்காம் நாள் இரவு நடைபெற்ற பளுதூக்கல் போட்டியில் இலங்கைக்கு 4 வெள்ளிப்பதக்கங்களும். ஒரு வெண்கல பதக்கமும் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த செவ்வாய்க் கிழமை காலை நடைபெற்ற ஆண்களுக்கான 170 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டியில் இலங்கை அணிக்கு தங்க பதக்கமும் இந்திய அணிக்கு வெள்ளி பதக்கமும் பாகிஸ்தான் அணிக்கு வெண்கலப் பதக்கமும் கிடைத்தன.

நேற்று முன்தினம் ஆண்கள் அணிகளுக்கிடையே நடைபெற்ற கபடி போட்டியில் இலங்கை அணி நேபாளம் அணியிடம் தோல்வியடைந்தது.

இதேபோல் இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற கான்போள் போட்டியில் பாகிஸ்தான் அணி 59:16 புள்ளிகள் வித்தியாசத்தினால் வெற்றிபெற்றது.

இலங்கை நேபாளம் அணிகளுக்கிடையே நடை பெற்ற கொக்கிப் போட்டியில் இலங்கை அணி 15:01 கோல்கள் வித்தியாசத்தினால் மிக இலகுவாக வெற்றிபெற்றது.

இதேபோல் இலங்கை, பங்களாதேஷ் கிரிக்கெட் அணிகளுக்கிடையே நடைபெற்ற இருபது-20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றது.


இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 164 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 19.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதனைத் தொடர்ந்து இந்தியா 27 தங்கம் 11 வெள்ளி 09 வெண்கலம் மொத்தமாக 47 பதக்கங்களுடன் தொடர்ந்து முதலாம் இடத்திலும் பாகிஸ்தான் 6 தங்கம் 13 வெள்ளி 06 வெண்கலம் மொத்தமாக 25 பதக்கங்களுடன் 2ஆம் இடத்திலும் பங்களாதேஷ் 05 தங்கம் 05 வெள்ளி 15 வெண்கலம் மொத்தமாக 25 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்ணீர் அஞ்சலி

## முத்தையா விசுவலிங்கம்



இருபாலை, கட்டைப்பிராய் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய நீண்டகாலத் தொண்டரும் தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருப்பவரும் அம்மாளின் வளர்ச்சியில் கரிசினை உடையவருமான திரு.விசுவலிங்கம் பாஸ்கரனுடைய அன்புத் தந்தையும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான *முத்தையா விசுவலிங்கம்* அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம்.

அன்னாரின் இழப்பினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்குஎமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

05.02.2010

பரிபாலன் சபை
கட்டைப்பிராய்
ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

(C-1390)

# பலாலி விமானத்தளத்தினை புனரமைக்க இந்தியா இணக்கம்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானத்தளத்தை சீர்படுத்தி மேம்படுத்திக் கொடுக்க இந்திய முடிவு செய்துள்ளது. இலங்கையில் உள்ள துறைமுகங்களை மறு சீரமைத்துக் கொடுக்கவும் அது ஒப்புக் கொண்டுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் காந்தா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கொழும்பில் அவர் கூறுகையில், காங்கேசன்துறை துறைமுகத்தை சீர்படுத் [illegible] துறைமுகத்தை சீர்படுத்தவும் இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது.

இதேவேளை பலாலி விமானதளத்தை சீர்படுத்தி மேம்படுத்தித் தரவும் இந்தியா முன் வந்துள்ளது என்றார்.

முன்னதாக நடந்த நிகழ்ச்சியில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சியில் உள்ள இடம்பெயர்ந்த தமிழர்களுக்காக இந்திய அரசு வழங்கும் கூடாரம் அமைக்கத் தேவையான ஷீட்களின் முதல் தொகுதியை இலங்கை அதிகாரிகளிடம் அசோக் காந்தா வழங்கினார். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நகர சபை, யாழ்ப்பாணம்.



# பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக...

முடிவுகளில் எந்தச் சிக்கலும் இல்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். எனவே இதற்குப் பின்னரும் எதிர்க்கட்சிகள் கூக்குரல் இடுவதில் அர்த்தமில்லை.

கடந்த ஒன்றரை மாதங்களாகவே இவ்வாறு பிரசாரம் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் திட்டங்களை மேற்கொண்டன: தேர்தல் நடைபெற்ற தினத்தன்று மாலை ஊடகங்களைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் தேர்தல் அமைதியாகவும் நீதியாகவும் நடைபெற்றதாகத் தெரிவித்திருந்தார்.

மேலும் அதற்காகப் பாதுகாப்புத் தரப்பினருக்கும் அரச ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் தற்போது எதிர்க்கட்சியினர் சத்தியாக்கிரகம் செய்ய முயற்சிக்கின்றனர். இதன் அர்த்தம் என்ன? எதனை மேற்கொள்வதற்கு எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர்?

சத்தியாக்கிரகம் செய்வதன் மூலம் வாக்குகளைப் பெற முடியாது. எனினும் எதிர்க்கட்சிகள் ஏன் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுகின்றன? என்று எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பேசுவதற்கு எதிர்க்கட்சிகளிடம் விடயங்கள்இல்லை. எனவே இந்தத் தேர்தல் விடயத்தைப் பிரசாரமாகப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன.

சர்வதேச மட்டத்தில் இலங்கை தொடர்பில் தவறான எண்ணத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது. மக்கள் விடுதலை முன்னணி பாரிய வீழ்ச்சியைக் கண்டிருந்தது. கடந்த மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மூலம் இந்த விடயம் புலப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளரை நிறுத்த முடியவில்லை.எனவே அவர்கள் வெளிப்படுத்திய புதிய வேட்பாளர் தோல்வியடைந்தார். எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 18 இலட்சம் மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அரச ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றினர்.

எதிர்க்கட்சிகளின் தற்போதைய கூற்றுக்கள் மூலம் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட அரச ஊழியர்கள் அலட்சியம் செய்யப்படுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் விக்கிரமபாகு கருணாரட்ண அடையாள அட்டையின்றி வாக்களிக்கச் சென்றமையால் வாக்களிக்க முடியாது திரும்பினார். பின்னர் தேர்தல் ஆணையாளர் தலையிட்டதன் பின்னர் வாக்களித்தார்.

அந்தளவுக்கு அரச ஊழியர்கள் கடமையுணர்வுடன் செயற்பட்டனர். அரச நிறுவனங்களில் பழிவாங்கல்கள் போன்ற சில சம்பவங்கள் இடம்பெறுவதாகத் தகவல்கள் வருகின்றன. அரசாங்கம் அதனை முற்றாக நிராகரிக்கின்றது.எனினும் அவ்வாறு சம்பவங்கள் இடம்பெற்றால் அது குறித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிவிக்கின்றோம்.(ச-5,14)

# அவசர காலச் சட்டத்திற்கு...

ளுக்குப்பயன்படுத்தியது எனவும் குற்றஞ் சுமத்தினார் ரில்வின் சில்வா.

அதேவேளை இன்று நடைபெறவுள்ள அவசர காலச் சட்டம் தொடர்பான விவாதத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் எதிராக வாக்களிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து ஐ.தே.கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன்சன் மைக்கல் பெரேரா தெரிவிக்கையில்;

சட்டத்திற்கு எதிராகவோ ,ஆதரவாகவோ வாக்களிப்பது தொடர்பில் இதுவரை நாம் எந்தவிதமான தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை.

இன்று எமது நாடாளுமன்றக் குழு சந்தித்துக் கலந்துரையாடும்போது தீர்மானம் எடுக்கப்படும் எனவும் கூறினார். ஆனால் அவசர காலச் சட்டத்தை மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றும் பலத்தை அரசாங்கம் கொண்டிருப்பதாக அரசின் பொதுசன ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-9)

# கண்டியில் கோலாகலமாக...

அத்துடன் நாட்டின் பல பகுதிகளில் சுதந்திரக் கொண்டாட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. இந் நிகழ்வுகள் அரச அதிகாரிகள் மற்றும் படையினர், பொதுமக்களால் நடத்தப்பட்டது.

இலங்கையில் 30 வருட காலமாகத் தமிழ் மக்களுக்குத் தனிநாடு கோரி போராடி வந்த விடுதலைப்புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற முதலாவது சுதந்திர தினம் என்ற வகையில் 62-வது சுதந்திர தினம் முக்கியத்துவம் பெற்றது.

கடந்த காலங்களில் நடைபெற்ற சுதந்திரக் கொண்டாட்டங்களின் போது விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் தலைநகர் கொழும்பில் வழமையாக நடைபெற்ற சுதந்திர தினம் இம்முறை கண்டியில் நடத்தப்பட்டமையும் இதற்குத் தேர்தலை முன்னிட்டான நாடாளுமன்ற அரசியல் நகர்வுகளின் வெளிப்பாடாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

62-வது சுதந்திர தினத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உட்பட்ட எதிர்க்கட்சியினர் புறக்கணித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை 1948 ஆம் ஆண்டு பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

# அரசியல்வாதிகள் மக்களை...

இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் மன்னர்களே! 30 வருட காலத்தில் இந்த நாட்டில் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை இருந்தது.

அந்த நிலைமையை நான் முற்றாக மாற்றியமைத்தேன். வடக்குக் கிழக்கில் ஜனநாயக முறையில் தேர்தல் நடந்தது. வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் ஆகிய பாரிய அபிவிருத்தித் திட்டங்களை நாம் அப் பகுதிகளில் மேற்கொண்டு வருகின்றோம்.

அரசியல்வாதிகள் மக்களைத் தவறாக வழி நடத்தக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார். ஜனாதிபதி தமிழில் உரையாற்றுகையில்,

இன்று எமது சுதந்திர தினம். நம் எல்லோருக்கும் சந்தோஷமான நாள். 30 வருட காலமாக நிலவிய பயங்கரவாத நிலைமை இப்போது இல்லை. அப்படியான சூழ்நிலையில் இன்று நாம் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்றோம்.

இன்று நாம் பிரச்சினைகள் எதுவுமின்றி நிம்மதியாக வாழ முடியும். பாதுகாப்பாக வாழ முடியும். காலம் முழுவதும் நாம் சந்தோஷமாக வாழ முடியும். அதுதான் மிக மிக முக்கியம்.

இது நமது தாய்நாடு. நாம் எல்லோரும் ஒரு தாய் மக்கள். இந்த நாட்டு மக்கள். நாம் அனைவரும் சகோதரர்கள். சம உரிமையோடு கௌரவத்துடன் நாம் வாழ வேண்டும். எல்லோருக்கும் எல்லா வசதிகளும் கிடைக்க வேண்டும். அதுதான் சமத்துவம்,சமநிலை.

ஒரே நாடு, ஒரே மக்கள் என்றவாறு நாம் வாழ வேண்டும். தாய் நாட்டை நீங்கள் எப்போதும் மறக்க வேண்டாம். இந்த நாட்டில் சிறுபான்மை என்று யாரும் இல்லை.

அபிவிருத்திப் பாதையில் நமது தாய் நாட்டை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.அபிவிருத்தியில் முக்கிய கேந்திரஸ்தானமாக எமது நாடு திகழ வேண்டும் என்றார்.

இம்முறை சுதந்திர தினக் கொண்டாட்ட தேசிய நிகழ்வு சிறி தலதா மாளிகை அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கண்டி இராசதானியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேசியக் கொடி ஜனாதிபதியினால் ஏற்றப்பட்ட பின்னர் வைபவம் ஆரம்பமானது. ஜெயமங்கல கீதம் இசைக்கப்பட்டதன் பின்னர் நாட்டின் இறைமைக்காகவும் ஒருமைப்பாட்டிற்காகவும் உயிர்த் தியாகம் செய்த தேசப் பற்றாளர்களைக் கௌரவிக்கும் பொருட்டு 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து ஜனாதிபதிக்காக 21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதுடன் முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது. மரியாதை அணி வகுப்புக்குப் பின்னர் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரையாற்றினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ஜனாதிபதித் தேர்தலில் எனது நாட்டு மக்கள் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் தாய் நாட்டின் வெற்றியை முழு உலகத்திற்கும் எடுத்தியம்பியுள்ளனர்.

அத்துடன் எமது மக்களும் நன்றிக் கடனைச் செலுத்தியுள்ளனர். இது போன்ற சிறந்த குணமுள்ள மக்களுடன் இணைந்து நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கக் கிடைத்தமை நல்லதொரு வாய்ப்பாகும்.

தாய் நாட்டை ஒற்றுமைப்படுத்தியதற்கான பெறுபேறு கிடைக்கின்ற காலம் இது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததால் யுத்தத்திற்குச் செலவான பெருந்தொகைப் பணம் எஞ்சியுள்ளது என எண்ண வேண் டாம்.

தற்போது நீங்கள் வழங்கிய ஆணையைக் கொண்டு 30 வருடங்களாக யுத்தத்தினால் நாட்டிற்கு அற்றுப் போன சகலவற்றையும் மீண்டும் தாய் நாட்டிற்குக் கொண்டு வருவதற்காக நான் பயன்படுத்துவேன்.

யுத்தத்தினால் பின் தள்ளப்பட்ட நாட்டை துரிதமாக முன்னோக்கிக் கொண்டு வருவேன். சமாதானம் இருந்தால் மட்டும் போதாது.செயற்றின் மிக்க நாட்டை நாம் கட்டி எழுப்ப வேண்டும்.

அன்று நாட்டைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் நாட்டிற்காகப் போரிட்ட தளபதிகளை எவ்வாறு நான் பாதுகாப்பேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அவர்களுக்காக நான் முன்னின்ற விதத்தை நீங்கள் அறிவீர்கள். நாட்டைக் கட்டி எழுப்பும் நடவடிக்கைகளில் நேர்மையாகக் கடமையாற்றுவதற்காகவும் அரச சேவையில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்காகவும் மாத்திரமன்றி சகலருக்காகவும் நான் முன்னிற்பேன்.

நான் அவர்களைப் பாதுகாப்பேன். தண்டனை மூலம் துன்புறுத்தல் மூலம் துப்பாக்கி மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. அர்ப்பணிப்புடன் மோசடியின்றியும் சேவையாற்றுவதன் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என நான் நம்புகின்றேன் என்றார். (ச-3,5,9)

# உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் ஏற்பாட்டில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் பொதுப் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் விழா எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

உசன் ஐக்கிய நாணய சங்கத் தலைவர் க.பேரம்பலம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா.சிறிஸ்கந்தமூர்த்தி பிரதம விருந்தினராகவும், உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபர் சி. மனோகரன், உசன் கந்தசுவாமி கோவில் அறங்காவலர் கு.விமலதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ந-3)

# மரண அறிவித்தல்கள்

## அமரர் சிவபுரநாதர் இராசவதி



அன்னார் காலஞ்சென்ற சுப்பையா தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மகளும் சிவபுரநாதரின் அன்பு மனைவியும் இந்துமதி, காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் கோபி கிருஸ்ணாவின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 05.02. 2010 (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரத்தை வட்டுக்கோட்டை

தகவல்
கோபி கிருஸ்ணா
(பேரன்)

(C-4387)

## திருமதி
## நிக்கலப்பிள்ளை பயஸ் கிறிஸ்ரீன்

(இளைப்பாறிய ஆசிரியை-புனித. பிறிஜிட் கன்னியர்மடம் கொழும்பு-07, திரு குடும்ப கன்னியர்மடம் யாழ்ப்பாணம், ஹென்றி அரசர் கல்லூரி, இளவாலை)

அன்னார் 'றோஸ் விலா' பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக் கொண்டவரும் காலம் சென்ற நிக்கலப்பிள்ளை டானியல் பயஸ் (வீமன்காமம், தெல்லிப்பளை-முன்னாள் துறைமுக ஆணைக்குழு உத்தியோகத்தர் கொழும்பு) என்பவரின் அன்பு மனைவியும், காலம்சென்ற திரு.*(Overseer)*, திருமதி தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலம்சென்ற அருட்சகோதரி மேரி லூசியா, திருமதி அலெக்ஸ் அமிர்தநாயகம், திருமதி புலோசம் மரியநாயகம் ஆகியோரின் அன்பு சகோதரியும், திருமதி வேதநாயகம் காலம் சென்ற திருமதி அருளானந்தம், காலம்சென்ற திருமதி அருள்நாயகம், திரு.பி.ஜே. அமிர்தநாயகம், காலம்சென்ற மரியநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அன்ரன் கிறிஸ்தோபர் பயஸ் *(South Africa)* *Dr.* திருமதி றாஜினி அரியரட்ணம் *(UK)* திருமதி காமினி இராஜரட்ணம் (கொழும்பு), திருமதி கிரிசாந்தி சிறில் (கொழும்பு), திருமதி அமிர்தினி சந்தியாப்பிள்ளை ஆகியோரின் அன்பு தாயாரும், *Dr.*சேனாதிராஜ் அரியரட்ணம், திரு. நிக்கொலஸ் ராஜரட்ணம், திரு.டிலீப் சிறில், திரு.றிஸ்யா சந்தியாப்பிள்ளை ஆகியோரின் மாமியாரும், *Dr.*தர்சன், *Dr.*சௌமியா, மறிற்ரா, ஜெனன், றெஜினா, சதீஸ், மெலிசா, தபிசோ, ஜோஜினா, லெறாட்டோ, ஈமா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், திரு.ரவி அழகரட்ணம் என்பவரின் பேர்த்தியும், மிஷேலின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பெப்ரவரி 1ஆம், 2ஆம் திகதிகளில் *A.F. Raymond's* (கொழும்பு) மலர்ச்சாலையில் காலை 10 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. 05.02.2010 (வெள்ளி) இன்று அன்னாரின் பூதவுடல் பண்டத்தரிப்பிலுள்ள அவரின் 'றோஸ் விலா' இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 06.02.2010 (சனி) நாளை காலை 9 மணிக்கு இரங்கல் திருப்பலிக்காக பண்டத்தரிப்பு புனித. அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகள்:
காமினி- 0770601049, கிருசாந்தி- 0112573705

தகவல்:-
பிள்ளைகள்

(C-565)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org